# உதயன்

சுடர் : 36 | கதிர் : 268 | திங்கட்கிழமை | ஆவணி 6 ஆம் நாள் 23 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## யாழ்ப்பாணத்தில் 10,000 தொற்றாளர்கள்!

### மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 23**

**யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளது. கொவிட் இறப்புக்களும் 200இனை எட்டியுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்தார்.**

15 ➤

---

ஊரடங்கின் மத்தியிலும்

## நேற்று மட்டும் 4,282 தொற்றாளர்கள்

### ஒரே நாளின் அதியுச்சத் தொகை

கொழும்பு, ஓக. 23

இலங்கையில் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முதல்முறையாக 4 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

15 ➤

---

## மேலும் 183 பேர் சாவு மொத்தக் காவு 7,366

கொழும்பு. ஓக. 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 183 பேர் நேற்றுமுன்தினம் சாவடைந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச

15 ➤

---

## ஊரடங்கிலும் வாள்வெட்டு மூவருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக. 23

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்

15 ➤

---

## உயிரிழந்த முதியவருக்கு கொவிட் தொற்று

வவுனியா, ஓக. 23

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டில் உயிரிழந்திருந்த நிலையில், அவருக்கு முன்னெடுத்த சோத

13 ➤

---

## கிராம அலுவலருக்கு கொரோனாத் தொற்று

வவுனியா, ஓக. 23

வவுனியா கனகராயன்குளம் வடக்கு கிராம அலுவலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பெண் கிராம அலுவலருக்குக் காய்ச்சல் இருந்த

13 ➤

---

## யாழ்.நகரில் ஊரடங்கை மீறிய 7 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஓக. 23

தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறி யாழ். நகரில் நடமாடுவோருக்கு யாழ். மாநகர சுகாதார பிரிவின

15 ➤

---

யாழ்ப்பாண மாவட்டத்தில்

## 2,000 ரூபா பெறுவதற்காக 57,000 குடும்பங்கள் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தில் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற 57 ஆயிரம் குடும்பங்கள் தகுதி பெறுவார்களென மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயல கத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை

13 ➤

---

## இரண்டாயிரம் ரூபா நிவாரணம் யாருக்கு?

### வெளியானது விவரம்

கொழும்பு, ஓக. 23

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள 10 நாள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலத்தில் வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்காக வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபா நிவாரணக்

15 ➤

---

## கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேலும் இரண்டு பேர் கொவிட் பெருந்தொற்றால் உயிரி

15 ➤

---

நான்கு முக்கிய விடயங்களில்

## தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்பட முடிவு

கொழும்பு, ஓக. 23

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கை, அரசியல் கைதிகள் விடுதலை, தாயகப் பரப்பில் நடைபெறும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக

15 ➤

---

## பல்கலை மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். சோதனை நிறுத்தம்

### வடக்கில் பெரும் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த பி.சி.ஆர். சோதனை நடவடிக்கைகள் கடந்த ஒரு

15 ➤

---

## கொரோனப் பேரலை வவுனியாவில் இருவர் பலி!

வவுனியா, ஓக. 23

வவுனியாவில் கொரோனாத் தொற்றால் நேற்று இருவர் உயிரிழந்தனர். வவுனியா மதகுவைத்தகுளம் கொரோனா மருத்துவமனையில் சேர்க்

15 ➤

---

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் பரிதாபச் சாவு

கிளிநொச்சி, ஓக. 23

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த நபரை, கொழும்பு விமான நிலையத்

15 ➤

---

யாழ். போதனாவின்

## பதில் பணிப்பாளரை மிரட்டியவர் பொலிஸாரினால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர், மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவை தொலைபேசி

15 ➤

---

## யாழில் பல இடங்களில் பாண் விலையில் மோசடி

### அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தில் நேற்று பல இடங்களில் பாணின் விலையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று தெரியவருகின்றது. யாழ்ப்

15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிர நிலையை அடையும் தொற்றாளர்கள் அதிகரிப்பு

## வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துட்டாவ தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.23**

**நாட்டில் அல்பா தொற்றுக்கு உள்ளானவர்களில் 5 சத வீதமானோரே ஒட்சிசன் தேவையுடையவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் டெல்டா தொற்றுக்கு உள்ளாவோரில் 10 சதவீதமானோர் ஒட்சிசன் தேவையுடையோராகவும் , தீவிர நிலைமையை அடையக் கூடியவர்களாகவும் உள்ளனர்.**



இவ்வாறு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துட்டாவ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒட்சிசன் தேவையுடைய, தீவிர நிலைமையை அடையக் கூடிய தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாகவே வீடுகளில் சிகிச்சையளிக்கும் முறைமை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் இதுவரையில் வீடுகளிலேயே சிகிச்சை பெற்ற கொவிட் தொற்றாளர்கள் எவரும் உயிரிழக்கவில்லை.

களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட, கொவிட்த் தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கும் வேலைத்திட்டம் வெற்றியளித்துள்ளது. அந்த மாவட்டத்தில் வீடுகளிலேயே சிகிச்சை பெற்ற கொவிட் தொற்றாளர்களில் ஒருவர் கூட உயிரிழக்கவில்லை. தொற்று நிலைமை சற்று தீவிரமடைந்த 5 சதவீதமானோர் வைத்தியசாலை களில் சேர்க்கப்பட்டனர்.

தற்போது இந்த முறைமை மேல் மாகாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டு ஏனைய மாகாணங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. டெல்டா தொற்று பரவல் வேகத்தின் அதிகரிப்புடன் தீவிர நிலைமையை அடையும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது - என்றார். (எ-இ)

# சமாசத்துக்குரிய காணியை கையகப்படுத்தும் தனிநபர்

## பின்புலத்தில் அரசியல்வாதிகள்

கிளிநொச்சி, ஓக. 23

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அரை ஏக்கர் காணியை தனிநபர்கள் அடாத்தாக பிடித்துள்ளனர் என்று சமாச நிர்வாகத்தினர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாவட்டச்செயலர் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் ஆகியோரிடமும் முறையிட்டுள்ளனர்.

ஏ9 வீதியில் 155 ஆம் கட்டைப் பகுதியில் சில பொது அமைப்புகளுக்கு காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் அரை ஏக்கர் கிளிநொச்சி மாவட்ட பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 2005 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டிருந்தது.

பெறுமதிமிக்க குறித்த காணியை தற்போது அரசியல் பின்புலத்தில் சிலர் அடாத்தாகப் பிடித்துள்ளனர். காணியை அடாத்தாகப் பிடித்தவர்களுடன் சமாச நிர்வாகத்தினர் பேசியபோது அவர்கள் அரசியல்வாதிகள் மற்றும் சில அரசியல் பிரமுகர்களின் பெயர்களைக் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலாளர் பா. ஜெயகரனிடம் வினவியபோது, "இந்த விடயம் தொடர்பில் கிராம அலுவலரும், சமாச நிர்வாகத்தினரும் தனது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். நாங்களும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். பொலிஸாரின் நடவடிக்கையைப் பொறுத்து மேலதிக நடவடிக்கை தொடரும்" என்று தெரிவித்தார்.

குறித்த காணி தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றில் இரண்டு வழக்குகள் நடைபெற்று இரண்டு வழக்குகளிலும் காணி சமாசத்துக்குரியதே என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்று சமாச நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-214)



# சட்டவிரோத மணல் அகழ்வு: ஜே.சி.பி. இயந்திரம் பறிமுதல்

கிளிநொச்சி, ஓக. 23

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு குளத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டவரின் ஜே.சி.பி. இயந்திரத்தை பொலிஸார் பறிமுதல் செய்தனர். சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.இந்தச் சம்பவம், கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.அவர் மீது நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்மடு குளத்தில் பிரதான நீர் பாயும் பகுதியான நெத்தலியாற்றுப்பகுதியில் பல வருடங்களாக அந்தப் பகுதியில் வசிக்கும் சிலர் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் நேரில்வந்து பார்வையிட்டுச் செல்வர். நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதில்லை. இந்தநிலையில், ஒருவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (த-113)

# ஊரடங்கு அனுமதிப் பத்திரம் பொலிஸால் வழங்கப்படாது

கொழும்பு, ஓக.23

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் பொலிஸார் ஊடாக ஊரடங்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய அத்தியாவசிய சேவைகளுக்கு செல்பவர்கள் தங்களது அடையாள அட்டை அல்லது நிறுவன பிரதானிகளால் வழங்கப்படும் கடிதங்களை சோதனை நடவடிக்கையில் ஈடுபடுகின்ற பொலிஸாரிடம் காண்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# சுமந்திரன் - பீரிஸின் கூட்டுச் சதியே கிளிநொச்சியில் ஓ.எம்.பி. அலுவலகம்

வவுனியா, ஓக. 23

சுமந்திரன்-ஜி.எல். பீரிஸ் கலந்துரையாடலின் பின்னர் கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரங்களைக் கையாளும் அலுவலகம் (ஓ.எம்.பி.) உருவாகியுள்ளது. செப்ரெம்பர் ஐ.நா. அமர்வுகளுக்கு முன்பு இந்த அலுவலகங்கள் பல இடங்களில் தோன்றலாம். அதற்காக நாம் ஆச்சரியப்படக்கூடாது. ஏனெனில், ஐ.நா. அமர்வில் இலங்கைக்கு அதிக கால அவகாசம் பெறுவதற்கான சுமந்திரன் மற்றும் ஜி.எல்.பீரிஸ் கூட்டின் சதியே இது.

இவ்வாறு, வவுனியாவில் 1646 நாள்களாக தொடர் மேற்கொள்ளும், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச மனித உரிமைகள் குழு மற்றும் ஐ.நா. என்பவற்றை சமாதானப்படுத்துவதற்கான சுமந்திரனின் தந்திரமே இந்த அலுவலகமாகும்.

12 வருடங்கள் தமிழர்களுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் பெறுவதற்கு பொன்னான நாள்கள் இருந்தன. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன் மற்றும் சம்பந்தன் தமிழர்களை ஏதோ காரணத்துக்காக வெறுக்கிறார்கள். அவர்கள் தமிழர்களை பழிவாங்குகிறார்கள்.

உலகில் எங்கள் போராட்டம் அதிக கவனம் செலுத்துகிறது. எமது போராட்டம் எமது மற்றைய போராட்டங்களுக்கும் புத்துயிர் கொடுப்பதை சில தமிழ் அரசியல் வாதிகளும், சிங்கள புத்திஜீவிகளும் விரும்பவில்லை.

சர்வதேச விசாரணைக்காகவும் அரசியல் தீர்வுக்காகவும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா என்பன ஈடுபாடு காட்டவேண்டும் என்பதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

ஊழல் செய்த தமிழ் அரசியல்வாதிகளுடன் சேர்ந்து நாம் அனைவரும் இலங்கையால் அழிக்கப்படுவதற்கு முன், எங்களுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தாயகம் வேண்டும் - என்றனர். (த-110)

# பெரஹராவில் பங்கேற்ற கலைஞர்களுக்கு தொற்று

கொழும்பு, ஓக.23

கண்டி, தலதா பெரஹராவில் பங்கேற்ற 76 கலைஞர்களுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பெரஹரா நிறைவடைந்த 21 ஆம் திகதிக்குப் பிறகு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையின் போதே இவர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. 76 கலைஞர்களும் கதிர்காம பெரஹராவில் பங்கேற்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்டர் தாக்குதல்

# கண்ணுக்குத் தெரியாத ஒரு பக்கம் உண்டாம்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் புதுக்கதை



**கொழும்பு, ஓக. 23**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் மேற்பரப்பில் தெரிவதைவிட கண்ணுக்குத் தெரியாத ஒரு பக்கம் இருப்பதாகத் தெரிகின்றது. இவ்வாறு கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தாக்குதலின் உண்மையை யாராவது மறைக்கமுயன்றால், அவர்களை மங்கச் செய்து, அவர்களின் சக்தியைக் குறைத்து, மனச்சாட்சிக்கு ஆதரவாக நிற்கும் சக்தியைக் கொடுக்கும்படி கடவுளிடம் கேட்கின்றோம்.

இந்தத் தாக்குதலின் விவரங்களை மறைத்து கைகளைக் கழுவ முயன்றாலும் கடவுள் அதற்கு அனுமதிக்கமாட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று 28 மாதங்கள் ஆகியுள்ள நிலையில், அதற்குக் காரணமானவர்கள் யார் என்று வெளிப்படுத்தப்படவில்லை - என்றார். (ஒ.22)




## நல்லை எம் பதியனே அழகெழில்

வடபகுதி யாழ் மண்ணின்–நல்லூர்
குல தெய்வப்பதி நல்லைக் கந்தன் எம் கடவுள்
வளங்கொழிக்கும் செழுங் கருணை நிலமதனின் நடுவில்
எழில் முருகன் என்றென்றும் ஆட்சி செய்தலே மரபு.

நல்லையெம் பதி எங்கள் நாயகன் மண்ணில்
நல்லூரை வலம் வருதலே தலையாய பக்தி
தொல்லை இடர் அகற்றி சோதனைகள் களைந்து
இல்லையினித் துயர் என்றே அருளாசி தருவான்.

நமையாளும் நல்லை நாயகனின் எழில்
நாம் மூழ்கிப் பக்திச் சூழமைவில் தோய்ந்து
நாளாந்தம் மூன்று வேளைகளில் வணங்கி
வேலேந்து நல்லை வேலவன் மேல் அன்புற்றோம்.

பழந்தமிழ் கடவுள் எழிலில் நல்லைக் கந்தன்
பார்வைதனைப் பார்க்க காளையரும் கன்னி
முதுமை விழு கிழட்டுப் பருவத்தினர் இளையோர்
யாவருமே ஆவலொடு காதலினைக் கொள்வர்.

ஆதலினால் அதனை பக்தி எனப் போற்றிப்
பழமுருகு குழந்தை வடிவு கோவணமாய் ஆண்டி
கோலமது ஏதெனிலும் கொண்டுற்றே மனதில்
நாம் ஏத்துவதும் போற்றுவதும் நல்லை எம் பதியே.

ஆண்டவனே ஆண்டுகளில் ஆவணியில் உன்னை
நாடி வரும் எங்களை வழி மூடியதும் ஏனோ
பார்த்து முகம் காத்திடும் உன் பரிவுதனை ஏனோ
மாற்றி விட்டு மாறுதலைக் காட்டுவதும் ஏனோ?

பார்க்கவெனப் பரிதவித்து ஓடி வரும் பக்தர்
தூக்கநிலை துறந்தார் துயரங்களைச் சுமந்தார் – கொடி
ஏறியதாம் ஆண்டிதிலே கொடியதாம் தொற்று
மாறிடவோ மாற்றிடவோ ஏன் நீ மறுக்கின்றாய்?

ஐ ஐந்து நாளென்று அனைத்துமே துறந்து
அடியவராய் ஓடி அழகனுனைக் காண
விழுந்துருண்டு விரைந்தபடி வீதிகளில் உன்னை
விரைந்துன்னைக் காண முடியாதா விம்முதே நெஞ்சு.

செவ்வேளே சண்முகா நல்லை எம் பதியனே
சொல்ல இனி வார்த்தைத் தொடர்களும் இல்லை
ஐயனே விழிகளில் கண்ணீருமில்லை
அழகனெம் முருகா பரிவினைக் காட்டிடு கனிந்து.

**'கலைஞானச்சுடர்' ஸ்ரீமதி சுபாஷினி,**
*தேஜஸ்வராலயா கலைக்கூடம்.*

## கொரோனாவுக்கு பயந்து மருத்துவமனைக்கு செல்வதைத் தவிர்த்து உயிரிழக்கவேண்டாம்

கொரோனாத் தொற்றுக்குப் பயந்து பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதேனும் சுகவீனம் ஏற்பட்டால் மருத்துவமனைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டாம் என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் ஹர்ஷ சதிஷ் சந்திர அறிவுறுத்தியுள்ளார்.

மாரடைப்பு போன்ற தீவிர நோய்கள் ஏற்படும்போது, மருத்துவமனைக்கு விரைந்து செல்லாவிட்டால் துரதிஷ்டவசமாக உயிரிழக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைப் பிரிவுகள் தனியாக இயங்குவதால் அது தொடர்பில் மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நீண்ட நாள் நோய் நிலைமையை உடையவர்கள், திடீர் நோய் நிலைமைக்கு உள்ளாகுபவர்கள் மருத்துவமனைக்குச் செல்லத் தயங்க வேண்டாம் என்றும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் ஹர்ஷ சதிஷ்சந்திர மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.22)



## விதை நெல்லுக்கு கிளிநொச்சியில் தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஓக. 23

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. சிறுபோக நெற்செய்கை கூடுதலாக விதை நெல் உற்பத்தியை இலக்காகக்கொண்டதாக இருந்தாலும் நெல் அறுவடை செய்தவுடன் பச்சை நெல்லாக விவசாயிகள் விற்பனை செய்துவருவதன் காரணமாக விதை நெல்லுக்கு நெருக்கடி காணப்படுகின்றது என்று செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுபோக கூட்டங்களை நடத்துகின்ற அதிகாரிகள் விதை நெல் உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். அது மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உலர விடும் தளங்கள் போதியளவில் அமைக்கப்படவில்லை. களஞ்சிய வசதிகள் இல்லை. நெல் உலர விடும் தளங்கள் இல்லாததன் காரணமாக வீதிகளில் விவசாயிகள் நெல்லை உலர விடுகின்ற அவலம் காணப்படுகின்றது.

நெல் உலர விடும் தளம், களஞ்சிய வசதிகள் இல்லாததன் காரணமாக கூடுதலான விவசாயிகள் நெல்லை உலரவிடாமல் அறுவடை செய்தவுடன் விற்பனை செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

அதனால் மாவட்டத்தில் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு நீடிக்கின்றது என்று செய்கையாளர்கள் கூறுகின்றனர். (கு-13)

# 18 முதல் 30 வயதுப் பிரிவினருக்கு செப். நடுப்பகுதி முதல் தடுப்பூசி

## தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு செப்ரெம்பர் நடுப்பகுதியில் இருந்து தடுப்பூசி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பதில் பணிப்பாளர் விசேட மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் தொடர்பில் விவரிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையிலுள்ள மொத்த சனத்தொகையில் 55 வீதமானோருக்கு ஓர் அலகு தடுப்பூசியேனும் ஏற்றப்பட்டுள்ளது. 25 வீதமானோருக்கு இரண்டு அலகு தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதாவது நாட்டிலுள்ள சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் தடுப்பூசித் திட்டத்தை பூர்த்தி செய்து பாதுகாப்பு பெற்றுள்ளனர்.

அத்துடன், செப்ரெம்பர் முதல் வாரத்துக்குள் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 2 அலகு தடுப்பூசிகளையும் வழங்குவதே எதிர்ப்பார்ப்பாக உள்ளது. அந்த இலக்கை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றோம். 30 வயதுக்கு மேற்பட்டோரில் 99 வீதமானோருக்கு இதுவரை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதில் 48 வீதமானோர் இரண்டு அலகுகளையும் பெற்றுள்ளனர். ஒரு தடுப்பூசியால் முழுமையான பாதுகாப்பு கிடைக்காது. எனவே, இரண்டு அலகு தடுப்பூசிகளையும் பெற வேண்டும்.

அதன்பின்னர் செப்ரெம்பர் நடுப்பகுதியில் இருந்து 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் தடுப்பூசி பெறாத சிலரும் உள்ளனர். அவர்களும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உயிரிழப்பைத் தடுப்பதும், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதுமே தடுப்பூசி வழங்குவதன் பிரதான நோக்கம் - என்றார். (ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் காற்றுடன் மழை

## மரம் முறிந்து வீழ்ந்ததால் நால்வர் காயம்

வவுனியா, ஓக. 23

வவுனியா கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் காற்றுடன் மழை பெய்ததால், மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் நான்குபேர் காயமடைந்தனர்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. பெரியகுளம் பகுதியில் இலேசான மழை பொழிந்தநிலையில் வீட்டின் அருகில் நின்றிருந்த பாலைமரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்துள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த இரண்டு சிறுவர்கள் உட்பட மூன்று பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறுவர்களின் தாயார் சிறுகாயங்களுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-10)

## 25 சாராயப் போத்தல்களுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, ஓக. 23

மதுவரித் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 25 சாராயப் போத்தல்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, கண்டி வீதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கற் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை முடக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானக் கொள்வனவு அதிகரித்து காணப்பட்டது. இந்தநிலையில் வவுனியா, கண்டி வீதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கற் ஒன்றுக்குச்சென்ற இருவர் 25 சாராயப் போத்தல்களை கொள்வனவு செய்துள்ளனர். குறித்த போத்தல்களை ஒருவருடைய மோட்டார் சைக்கிளில் வைத்து கொண்டுசெல்ல முற்பட்டபோது அங்கு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள் 25 சாராயப் போத்தல்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபரை கைதுசெய்தனர். சாராயப் போத்தல்களையும் பறிமுதல் செய்தனர்.

குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (த-18)

## விழிப்புணர்வுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 23

பாடசாலை மாணவர்களிடையே நீர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கவிகை அமையத்தினரால் சித்திரப் போட்டி மற்றும் இணைய வழியிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சித்திரப் போட்டியானது 2 பிரிவுகளாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு 1 இல் தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான மாணவர்களும், பிரிவு 2 இல் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

பிரிவு 1 ஐ சேர்ந்த மாணவர்கள் 'எனது சுற்றாடலில் நீர் பிரச்சினை' அல்லது 'நீரின்றி என் ஊர்' எனும் தலைப்புகளை தழுவியதாகவும் பிரிவு 2 ஐ சேர்ந்த மாணவர்கள் 'தீவுகளில் குடிதண்ணீர் பிரச்சினை அல்லது 'கட்டுப்பாட்டில் குடிநீர் தட்டுப்பாடு' எனும் தலைப்புகளை தழுவிய தாகவும் ஆக்கங்களை அனுப்ப முடியும்.

சித்திர ஆக்கங்களை A4 தாளில் வரைந்து தெளிவாக படம் பிடித்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆகும்.

ஆக்கங்களை அனுப்புவது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு www.kavigai.org எனும் இணையத்தள பக்கத்தை பார்க்கவும், அல்லது 0772848770 எனும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-319)



## 3 வருடங்களாக இழுபறிப்படும் வற்றாப்பளை வீதிப் புனரமைப்பு

முல்லைத்தீவு, ஓக. 23

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் 3ஆம் கட்டைச் சந்தியிலிருந்து வற்றாப்பளை நோக்கிச்செல்லும் 5 கிலோமீற்றர் நீளமான வீதிப் புனரமைப்பு சுமார் 3 வருடங்களுக்கும் மேலாக இழுபறிநிலையில் காணப்படுகின்றது. அதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் குறித்த வீதியைப் புனரமைக்கின்றனர். ஆனால், இன்றுவரை அது பூர்த்தி செய்யப்படாது இழுபறியில் காணப்படுகின்றது.

வற்றாப்பளை கிராம மக்கள் முல்லைத்தீவு நகரம், முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். வீதிப் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், குறித்த பணிகளை விரைவாக முன்னெடுத்து முடிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (த-13)

## ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில் 40 ஆயிரம் பொலிஸார் களத்தில்

கொழும்பு, ஓக. 23

**தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை கண்காணிப்பதற்கு சுமார் 40 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் எத்தனை பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும், அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை எவ்வளவு எனவும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச பொலிஸ் பொறிமுறையுடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலத்திலும் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். ஏனைய பணிகளுக்கு மத்தியில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தொடர்பான பணியிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 40 ஆயிரம் பொலிஸார்வரை இக்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

நாடு தழுவிய ரீதியில் 900 இற்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட வாகன பரிசோதனைச் சாவடிகள் உள்ளன. நாளாந்தம் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

தேவைக்கேற்ப இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் -என்றார். (ஒ-44)





## புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தில் 3 கிணறுகள் தூர்வாரப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 23

புங்குடுதீவு முதலாம் வட்டாரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அருகே காணப்படுகின்ற மூன்று நன்னீர் கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டதோடு தூர்ந்து காணப்பட்டிருந்த நன்னீர் கிணறொன்றும் தூர்வாரப்பட்டது. அத்தோடு அந்தப்பகுதியில் துப்புரவு மேற்கொள்ளப்பட்டதோடு, மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி கருணாகரன் சாரதாம்பாளின் பிறந்த தினத்தினை முன்னிட்டு சூழலியல் மேம்பாடு நிறுவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனின் 50 ஆயிரம் ரூபா நிதி பங்களிப்பில் மேற்படி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## வவுனியா மருத்துவமனைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா, ஓக. 23

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பிரிட்டன் கிளையினரால், வவுனியா மருத்துவமனைக்கு உயிர்காப்பு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த உபகரணங்கள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழையமாணவர் சங்கத்தினதும்(தாய்சங்கம்), வவுனியா மாவட்ட மருத்துவ பிரிவினரதும் வேண்டுகோளுக்கிணங்க, பிரிட்டன் கிளையினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 11லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களே வழங்கிவைக்கப்பட்டன. இவற்றை வழங்கும் நிகழ்வில் தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் பழையமாணவர் சங்க பிரதிநிதிகள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடன் பட்ட நெஞ்சமும் இலங்கை வேந்தனும்

*'விடங்கொண்ட மீனைப் போலும்*
*வெந்தழல் மெழுகு போலும்*
*மடங்கொண்ட பாந்தள் வாயில்*
*பற்றிய தேரைப் போலும்*
*திடங்கொண்ட ராமபாணம்*
*செருக்களத் துற்ற போது*
*கடன் கொண்ட நெஞ்சம் போலும்*
*கலங்கினான் இலங்கை வேந்தன்'*


இந்தப் பாடல் வரிகளை தனது இராமாயணக் கீர்த்தனைகளில் சீர்காழி அருணாசலக் கவிராயர் எந்த நேரத்தில் எழுதினாரோ தெரியவில்லை. ஆனால் அந்தப் பாடலின் இறுதிவரிகள் இலங்கையின் வேந்தர்களுக்கு எப்போதும் சாலப் பொருத்தமானதாகவே இருந்து வந்திருக்கின்றது. அதிலும் இப்போதைய கோத்தாபய அரசாங்கத்தின் 'கடன் கொண்ட நெஞ்சம்' மிக விசாலமானது. கடன் வாங்குவதில் உலக சாதனையொன்றை இலங்கை படைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவுக்கு போவோர், வருவோரிடமெல்லாம் சகட்டுமேனிக்கு கடன்மேல் கடனாக வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம். அதனால்தான் உலகிலேயே பங்களாதேஷ் என்ற வறிய நாடொன்றிடம், கொவிட்டில் இருந்து மீண்டு வருவதற்காக கையேந்திக் காசு வாங்கிய முதல்நாடு என்ற பெருமை(?) இலங்கைக்கு கிட்டியிருக்கிறது. நல்லகாலம், இதுவரை நித்தியானந்தாவின் 'கைலாசா' பற்றி, இலங்கை அரசாங்கத்துக்கு தெரியாது போலும். இல்லாவிட்டால் அங்கும் திருவோட்டை ஏந்தியிருப்பார்கள்.

'என்ன வளம் இல்லை எங்கள் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?' என்று மார்தட்டிப் பாடுமளவுக்கு இலங்கையில் எல்லா வளங்களும் கொட்டிக் கிடந்தும், இன்னமும் பிற நாடுகளை நம்பியே வாழும் சாபக்கேடு நமக்கு. இதற்கு முன்னர் போரைக் காரணம் காட்டினார்கள். ஆனால் போர் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்தும் கூட, முன்னரைக் காட்டிலும் மோசமான நிலையிலேயே இலங்கைப் பொருளாதாரம் இருக்கின்றது. இலங்கையை விடவும் வளம் குறைந்த நாடுகள் கூட, கொரோனாப் பெருந்தொற்றை தங்கள் சுய பொருளாதாரப் பலத்தின் அடிப்படையில் சமாளிக்கையில், நாமோ எல்லாவற்றுக்கும் கையேந்திக் கொண்டே இருக்கிறோம். பி.சி.ஆர் இயந்திரங்களுக்கு பிற நாடுகளிடம் கையேந்தினோம். சிகிச்சைக்கான மருந்துவகைகளுக்கு கையேந்தினோம். தடுப்பூசி வகைகளுக்கு கையேந்தினோம். இப்போது ஒட்சிசனுக்கும் சீனாவிடம் கையேந்துகிறோம். இப்படிக் கையேந்துவதைத் தவிர வேறெதுவும் செய்யத்தெரியாத நாடாக மாறிவிட்டோம்.

'நக்குண்டார், நாவிழந்தார்' என்பார்கள். இப்படி எல்லாவற்றுக்கும் பிற நாடுகளை எதிர்பார்க்கும் இரவல் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுவதால், ஒட்டுமொத்த இலங்கையையும் பிற நாடுகள் கூறுபோட்டு, தமது உடமையாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. கண்முன்னே நாடு பறிபோய்க் கொண்டிருக்கிறது. ஆனால் இதைப்பற்றியெல்லாம் இந்த அரசாங்கத்துக்கு துளியும் அக்கறை கிடையாது. ஒருபக்கம் கொரோனாப் பரவுகையைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி நாட்டை முடக்கிவிட்டு, இன்னொரு பக்கம் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையத்தையும், சுற்றுலாத் தலங்களையும் அகலத் திறக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை மிகப்பெரிய பங்கை வகிப்பதால், அந்தத் துறையை உயிர்ப்போடு வைத்திருக்கவே இந்த முடிவு என்றும், தற்போது இந்தியாவில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதால் அவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதில் பிரச்சினை ஏதுமில்லை என்றும் அரசாங்கம் தன்பக்க நியாயத்தை சொல்கிறது.

கொரோனாவின் முதலாம் அலையின் போதும், முற்றுமுழுதாக கொரோனாவைக் கட்டுப்படுத்த முன்னரே வெளிநாட்டு சுற்றுலாவிகளுக்காக விமான நிலையத்தையும், சுற்றுலா மையங்களையும் திறந்ததாலேயே, இரண்டாம், மூன்றாம் அலைகள் விஸ்வரூபமெடுத்தன. அப்போது சூடு கண்டும் கூட கோத்தாபய அரசாங்கம் மீண்டும் சுற்றுலாத்துறை என்ற அடுப்பங்கரையை நாடவே செய்கின்றது. இந்திய சுற்றுலாவிகளை நாட்டுக்குள் அனுமதிப்பதன் மூலம் கொரோனாவின் இன்னொரு அலைக்கு அரசாங்கம் அத்திபாரம் போடுகின்றதா என்ற சந்தேகமும் எழவே செய்கின்றது.

ஒன்றில் பிறநாடுகளிடம் காசு, மருந்து, உணவுப்பொருள்கள், தடுப்பூசி, இலத்திரனியல் உபகரணங்கள், தொழினுட்ப உதவிகள் என்று எல்லாவற்றையும் இரவலாக வாங்குவது அல்லது நாட்டுக்கும் மக்களுக்கும் கேடு விளைவிக்கக் கூடிய வருமான வழிகளைத் தேர்ந்தெடுப்பது என்ற இரண்டில் ஏதேனும் ஒன்றுதான் இந்த அரசாங்கத்துக்கு தெரியும் போலும். இலங்கை வேந்தனாவது கடன் பட்ட நெஞ்சம் போல கலங்கினான். ஆனால் இந்த நவீன இலங்கை வேந்தரோ கடன் படுவதிலேயே கண்ணாக இருந்து, களிப்படைந்து, நாட்டையல்லவா மண்ணாக்குகின்றார்.



# உலக சந்தையில் எரிபொருள் விலை சரிவு உள்நாட்டிலும் விலையைக் குறைக்க கோரிக்கை



**கொழும்பு, ஓக.23**

**உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை கணிசமாக குறைந்துள்ளதால் எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம், நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவிடம் கோரியுள்ளது.**

இது தொடர்பான கடிதம் ஒன்றை நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம், நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ளது.

ஜூலை 30 ஆம் திகதி 73 டொலருக்கு விற்கப்பட்ட ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 62 டொலராக குறைந்துள்ளது என்று அந்த இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சந்தை விலைகளின் அடிப்படை யில் உள்ளூர் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதால், எரிபொருள் விலை இப்போது குறைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

(எ-இ)

# இந்தியாவிலிருந்து சுற்றுலாவிகள் அடுத்த வாரம் இலங்கை வருகை

கொழும்பு, ஓக. 23

இந்திய சுற்றுலாவிகளுக்காக அடுத்த மாதத்திலிருந்து நாட்டை மீண்டும் திறக்க இலங்கை முடிவு செய்துள்ளதாகவும் சுற்றுலாத் தொழில்துறை புத்துயிர் பெறுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மூன்று நட்சத்திர அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஹொட்டல்களில் தங்குவதற்கு ஒப்புக்கொள்ளும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரமுடியும். ஜனாதிபதி கோத்தாபய மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோருடனான கலந்துரையாடலின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஊடாக சுற்றுலாவிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர். அதன் பின்னர் ஏனைய சர்வதேச விமான நிறுவனங்கள் இந்தியாவிலிருந்து சுற்றுலாவிகளை அழைத்து வரும்.

இந்தியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புக்கள் என்பன பெருமளவில் குறைவடைந்துள்ளன. இதனையடுத்தே சுற்றுலாவிகளை அழைக்கும் வேலைத்திட்டத்தை இலங்கை ஆரம்பித்துள்ளது.

நாடு முடக்கப்பட்டிருந்தாலும், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்படும் சுற்றுலாவிகள் பார்வையிடுவதற்கு பூங்காக்கள் உள்ளிட்ட சகல சுற்றுலாத் தலங்களும் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.இ)

## ஊரடங்கில் திறந்திருந்த 6 கடைகள் தனிமையாகின

வவுனியா, ஓக. 23

வவுனியாவில் ஊரடங்கு நேரத்தில் திறந்திருந்த 6 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தல் காரணமாக 20 ஆம் திகதி இரவு 10 மணி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நாடு முழுவதும் முழுமையான முடக்கம் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் இணைந்து விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தநிலையில், வவுனியா மொத்த மரக்கறி விற்பனை நிலையம் மற்றும் நகர் பகுதிகளில் முடக்க காலப்பகுதியில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்ட 6 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸாரால் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தப்பட்டு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. அவர்களுக்கு எதிராக கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

(த-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிகுறிகள் காணப்படின் தனிமைப்படுத்திக்கொள்ளவும்

கொடிகாமம் சந்தையில் சில நாள்களுக்கு முன்பு கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் அவர்களூடாக தொற்றடைந்த ஏனைய தொற்றாளர்கள் அனைவரிடமும் ஒரேவிதமான காய்ச்சல், உடல் உளைவு, மணம் மற்றும் சுவை இழத்தல், வயிற்றோட்டம், இருமல், தடிமன், தொண்டை நோவு ஆகிய அறிகுறிகள் தனித்து அல்லது கூட்டாக முதலில் தோன்றியிருந்தன என்றும் இவற்றின் தொடர்ச்சியாக ஒரு சிலருக்கு மாத்திரம் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவ்வாறான அறிகுறிகளுடன் உங்களது வீட்டில் அல்லது அயலில் எவரேனும் காணப்படின் சுய தனிமைப்படுத்திக்கொண்டு பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்வாறான அறிகுறிகளின் தீவிரத்தன்மை அதிகரித்து மருத்துவ கண்காணிப்பு தேவையானவர்கள் மாத்திரம் நோயாளர் வருகைபற்றி பொதுச் சுகாதார பரிசோதகர் ஊடாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்கூட்டியே தகவல் வழங்கிய பின்னர் 1990 க்கு அழைத்து அவசர அம்புலன்ஸ் வண்டி சேவையை பயன்படுத்தி குறித்த மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கென பிரத்தியேகமாக இயங்கும் விடுதியில் நோயாளரை அனுமதித்துக் கொள்ள நடவடிக்கை எடுங்கள்.

அறிகுறிகள் ஏற்பட்டவுடன் சுயதனிமைப்படுத்தலில் இருக்காது, சமூகப் பொறுப்பற்று சிலர் வெளியே நடமாடியமையால் அவர்களது வீட்டுச் சுற்றாடலில் மேலும் பலர் தொற்றுக்குள்ளாகி மேலும் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. எனவே இவ்வாறான அறிகுறிகளுடன் உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளாமல் வெளியில் நடமாடிக்கொண்டிருப்பவர்கள் பற்றிய விவரங்களை பகுதி கிராம அலுவலருக்கு நேரடியாக அறிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து-159)

# கிடைக்கும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொதுமக்களிடம் கோரிக்கை



**கொழும்பு, ஓக. 23**

**தங்களுக்குப் பிடித்தமான தடுப்பூசிக்காகக் காத்திருக்காமல், கிடைக்கும் ஏதேனும் ஒரு தடுப்பூசியை மக்கள் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கோரியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

60 வயதுக்கு மேற்பட்டோர் முடியுமானவரை விரைவாக, தமக்கு அருகிலுள்ள தடுப்பூசி செலுத்தல் நிலையத்துக்கு சென்று தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும்.

தற்போது கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களில் 70 முதல் 80 சதவீதமானோர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்களே - என்றார். (எ-இ)

# மரத்துடன் மோதிய முச்சக்கரவண்டி இளைஞர்கள் இருவர் பரிதாபச் சாவு

கொழும்பு, ஓக. 23

மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில - ஹம்பேகமுவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் ஹம்பேகமுவ கொட்டவெஹெரமங்கட 1ஆம் மைல்கல் பிரதேசத்தைச் சேர்ந்த சந்தருவன் சங்கல்ப (வயது 16), இசுரு லக்ஸ்மன் பிரியதர்ஸன (வயது 17) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இருவரும் முச்சக்கர வண்டியில் பயணித்தபோது அது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுவிலகிச் சென்று மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.


விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி உட்பட மூவரும் படுகாயமடைந்த நிலையில் ஹம்பேகமுவ பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இளைஞர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்படும்போது உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முச்சக்கரவண்டிச் சாரதி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஒ-22)

# குடும்பநல சுகாதார சேவை அதிகாரிகள் 10 பேருக்கு தொற்று



கொழும்பு, ஓக. 23

பேருவளை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்தில் பணியாற்றும் குடும்பநல சுகாதார சேவை அதிகாரிகள் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளான அதிகாரிகள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

குறித்த அதிகாரிகளுக்குப் பதிலாக ஏனைய அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-22)

# தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு தொற்று வாய்ப்புக் குறைவு

## ஆய்வில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக.23

தடுப்பூசியின் இரு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றும் தன்மை 65 வீதத்தால் குறையும் என்று ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு உயிரியல் சார்ந்த ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவாந்தர மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

88 மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், அவற்றில் 84 டெல்டா வகை தொடர்புடைய மரபணுக்கள் பகுப்பாய்வாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கூறினார்.

கொழும்பு , மஹரகம ,மாலபே, வவுனியா ,இரத்தினபுரி, கம்பஹா, கண்டி, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் இவர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். (எ-இ)

# முடக்கத்திலும் வீதி அபிவிருத்தி பணிகள் தொடர்ந்து நடைபெறும்

கொழும்பு, ஓக. 23

நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் நெடுஞ்சாலை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன நாடு முழுவதும் ஆரம்பித்துள்ள அனைத்து வீதி அபிவிருத்தி திட்டங்கள் உட்பட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் வழமைபோன்று தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நெடுஞ்சாலை அமைச்சின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் தற்போதைய தொற்றுநோய் நிலைமையை கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், அபிவிருத்தித் திட்டங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தங்களின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையை சமர்ப்பித்து எந்த இடையூறும் இல்லாமல் தங்கள் பணியிடங்களுக்குத் திரும்ப முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிர்மாணப் பணிக்ள், புதிய களனிப் பாலம் திட்டம், 5 ஆயிரம் கிராமியப் பாலங்கள் நிர்மாணிக்கும் திட்டம், ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டப் பணிகள் சுகாதாரத் தரப்பு வழங்கியுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்ததாக ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

# கொலைச் சந்தேகநபர்களுக்கு மறியல்

இரத்தினபுரி மாவட்டம், தொடம்பே மண்டதெனிய பிரதேசத்தில் ஒரு பிள்ளையின் தந்தையைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கொலையுண்டவரின் மனைவி உள்ளிட்ட இருவரை, எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, இரத்தினபுரி பிரதான நீதிவான் ஜனிதான ரோஸனி உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த இந்திக்க சமன்குமார (வயது 32) என்பவர் கடந்த மாதம் 30 ஆம் திகதி அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். ஆரம்பத்தில் அவர் கொரோனாத் தொற்றினாலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், உடற்கூற்றுப் பரிசோதனையில் அவர் தூக்க மாத்திரை உட்கொண்டும் கழுத்து நெரித்தும் படுகொலைச் செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையையடுத்து, கொலைசெய்யப்பட்ட நபரின் மனைவியையும் மற்றுமொரு நபரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் எரிவாயு சந்தையில் தாராளம்



## இராஜாங்க அமைச்சர் உறுதியளிப்பு

**கொழும்பு, ஓக. 23**

**இனிவரும் காலங்களில் எந்தவொரு சமையல் எரிவாயுவையும் சந்தையில் தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்ள முடியும் என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.**

லிட்ரோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்களுக்கு கடந்த சனிக்கிழமை கண்காணிப்பு விஜயமொன்றை அமைச்சர் மேற்கொண்டிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போது லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் தமது முந்தைய விலையில் எரிவாயு கொள்கலன்களை விநியோகித்து வரும் அதேவேளை, லாப்ஸ் நிறுவனம் கடந்த 20 ஆம் திகதி முதல் புதிய விலையில் சந்தைக்கு சமையல் எரிவாயுவை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது.

கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் குறித்த நிறுவனங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எரிவாயு கொள்கலன்களை பார்வையிட்டதன் பின்னர், இன்று திங்கள் முதல் தட்டுப்பாடின்றி சந்தையில் எரிவாயுவை பெற்றுக்கொள்ளமுடியும் என தெரிவித்தார். (ஒ.இ)

HDFC வங்கியின்
பாதுகாப்பு பெட்டக வசதி

உங்கள் நகைகள் மற்றும் பெறுமதியான ஆவணங்களை எங்கே வைக்கிறீர்கள் ?

இலகுவான முறையில் உங்கள் பெறுமதியானவற்றை நம்பிக்கையுடன் பாதுகாத்திடுங்கள்.

இன்றே HDFC வங்கியின் யாழ்ப்பாண கிளைக்கு வாருங்கள்.




SAFTEY LOCKERS
இற்கான கட்டணங்கள்...!!!

| அளவு | வருட வாடகை | வைப்பு (ரூபா) சேமிப்பு | | நிலையான வைப்பு |
|---|---|---|---|---|
| சிறிய | 2,500/- | 65,000/- | அல்லது | 50,000/- |
| நடுத்தர | 3,000/- | 75,000/- | அல்லது | 75,000/- |
| பெரிய | 3,500/- | 100,000/- | அல்லது | 100,000/- |

077 317 6679
021 221 9283
HDFC வங்கி
இல.127, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
HDFC BANK
உங்கள் வீட்டு வங்கி



# சிறுவர்களுக்குத் தடுப்பூசி விரைவில் ஏற்ற நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 23

12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள், இளைஞர் மற்றும் யுவதிகள் ஆகியோருக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவர்களின் சங்கத்தினர் முன்வைத்த யோசனையை தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றாநோய் மற்றும் விசேட தேவையுடைய 12 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்துமாறு அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் பைஸர் போன்ற தடுப்பூசியே சிறுவர்களுக்கு பொருத்தமானதென மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து கலந்துரையாடி எதிர்வரும் நாள்களில் தீர்மானமொன்றை எட்டவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# ஆப்கானிலுள்ள இலங்கையர்களை பத்திரமாக மீட்பதற்கு உதவுங்கள்

## உலக நாடுகளிடம் கெஞ்சுகிறது அரசு

கொழும்பு, ஓக. 23

ஆப்கானிஸ்தானில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு மீள அழைத்து வருவதே எமது முதன்மையான கவலையாகும். ஆப்கானிஸ்தானில் உள்ள இலங்கையர்கள் அங்கிருந்து வெளியேற விரும்பினால், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, பாகிஸ்தான் அரசுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள இலங்கையர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கேட்டுக் கொண்டார். இந்த நோக்கத்துக்காக தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க இலங்கை அரசு தயாராக உள்ளது. ஆப்கானிஸ்தானில் உள்ள 86 இலங்கையர்களில், இதுவரை 46 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். தற்போதைய நிலைவரப்படி 20 இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், வெளிவிவகார அமைச்சு அவர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கிடையில், ஏனைய 20 இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானில் தங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். தலிபான்கள் பொதுமன்னிப்பு வழங்கியிருப்பதுடன், எந்த வெளிநாட்டினருக்கும் தீங்கு செய்ய மாட்டோம் என உறுதியளித்துள்ளமைக்கு இலங்கை அரசு மகிழ்ச்சியடைகின்ற அதேவேளை, அந்த உறுதிப்பாட்டை தொடர்ந்தும் மதிக்குமாறு தலிபான்களைக் கேட்டுக் கொள்கின்றது.

இஸ்லாமியப் பாரம்பரியத்தைப் பின்பற்றி ஆப்கானிஸ்தானில் பெண்கள் தொழில்களில் ஈடுபடலாம் மற்றும் பெண்கள் பாடசாலைகளுக்குச் செல்லலாம் என தலிபான்கள் அளித்த உறுதிமொழிகளைக் கண்டு இலங்கை அரசு மகிழ்ச்சியடைகின்றது. நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்ல அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய பொறிமுறையொன்று நிறுவப்படும் என தலிபான்கள் வெளியிட்ட அறிவிப்பை இலங்கை அரசு கவனத்தில் கொள்கின்றது.

தற்போது தலிபான் ஆட்சியில் இருப்பதால், சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையை உறுதிப்படுத்துமாறும், ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து மக்களினதும் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தைப் பாதுகாக்குமாறும் இலங்கை அரசு கோரிக்கை விடுக்கின்றது.

ஒட்டுமொத்த தெற்காசியப் பிராந்தியத்திலும் சீர்குலைக்கும் விளைவை ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்பான இடத்தையும், சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்தையும் மேம்படுத்த முயலும் தீவிர மதவாதக் குழுக்களின் சாத்தியக்கூறுகள் குறித்து இலங்கை அரசு கவலை கொண்டுள்ளது. அன்றாட நிலைமைகளை அரசு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. மேலும் சார்க் உறுப்பினர் என்ற வகையில், இது சம்பந்தமாக எந்தவிதமான பிராந்திய முயற்சிகளுக்கும் உதவுவதற்கு இலங்கை தனது பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசனுக்கும் சீனாவிடம் கையேந்துகிறது இலங்கை

**கொழும்பு, ஓக.23**

**இலங்கைக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவுக்காக சீன அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், கொவிட் தொற்று தீவிரமடைந்துள்ளதை அடுத்து ஏற்பட்ட ஒட்சிசன் தேவைப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்என்று சீனத் தூதுவரிடம் கோரியுள்ளார்.**



வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பின்னர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சீனத் தூதுவர் குய் ஜென்ஹொங்கை சந்தித்து கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பின் போதே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவுக்காக சீன அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. முழு அளவில் அனைத்து நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கான முன்னுரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சரின் புதிய நியமனத்துக்காக சீனத் தூதுவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இலங்கையின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கும், கொவிட் 19 தொற்றுநோயைத் தணிக்கும் முயற்சிகளுக்குமான சீனாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

கொவிட்-19 ஒத்துழைப்பு, மக்களுக்கிடையேயான பரிமாற்றங்கள், பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் பல்துறை சார் ஒத்துழைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டதாக இந்தக் கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.(எ-இ)

## பொருளாதார நிலையங்களை இரு நாள்கள் திறக்கத் தீர்மானம்

கொழும்பு, ஓக.23



**தனிமைப்படுத்தல் ஊரடங்கு** பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் நாட்டிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்களையும் இரு நாள்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் நாட்டின் அனைத்து பொருளாதார மத்திய நிலையங்க்ளும் திறக்கப்படவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சஷீந்ர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மொத்த விற்பனைக்காக மாத்திரமே பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நாட்டில் பல இடங்களில் மழைக்கான சாத்தியம்!

கொழும்பு, ஓக.23



நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மத்திய, ஊவா, வடக்கு, வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல், மேல் மற்றும் சப்ரகமுவமாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)



## 12 சிறுவர்கள் கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.23

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுவர்களில் இதுவரை 12 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

லேடி ரிஜ்வே மருத்துவமனையில் 20 தொடக்கம் 30 வரையான சிறுவர்க ளுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் மருத்துவர் ஜி.விஜேசூரிய தெரித்துள்ளார். (எ-இ)

## மூன்றாவது தடுப்பூசிக்கு தயாராக இருக்க வேண்டும்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.23



கொரோனாத் தடுப்பூசிகளின் மூன்றாவது டோஸை பெற்றுக்கொள்ள நாட்டு மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு ஜனாதிபதியும் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், சகல சுகாதாரப் பணியாளர்களுக்கும் மூன்றாவது டோஸ் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# கடன் அட்டை பயன்பாட்டில் புதிதாக கட்டுப்பாடு இல்லை

## மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.23

கடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் ஏனைய சேமிக்கப்பட்ட பெறுமதி அட்டைகள் பயன்படுத்துவதற்கு புதிய கட்டுப்பாடுகள் எவையும் அறிமுகப்படுத்தவில்லை என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது

கடன் அட்டை, பற்று அட்டை மற்றும் ஏனைய சேமிக்கப்பட்ட பெறுமதி அட்டை வைத்திருப்பவர்கள் அத்தகைய அட்டைகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆள்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் சில கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலிருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள் அல்லது தடுக்கப்பட்டுள்ளார்கள் என வெளியான செய்திகளை அடுத்தே மத்திய வங்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி தெரிவித்துள்ளதாவது

இலத்திரனியல் நிதிப் பரிமாற்று அட்டைகளை, அதாவது கடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் ஏனைய சேமிக்கப்பட்ட பெறுமதி அட்டைகள் பயன்படுத்துவதன் மீது மத்திய வங்கி புதிய கட்டுப்பாடுகளை எதையும் அறிமுகப்படுத்தவில்லை. [illegible] ளுக்குத் அறிவித்திருக்கிறோம். அத்தகைய அட்டைகளை வைத்திருப்போர் தனிப்பட்ட தன்மையிலான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆள்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும், அத்தகைய அட்டைகளின் தவறான பயன்பாட்டைத் தவிர்ப்பதற்கும் அத்தகைய வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளுக்கு அமைவாக கொடுக்கல் வாங்கல்களை முன்னுரிமைப்படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணியிலான கொடுக்கல் வாங்கல்களுக்காக இலத்திரனியல் நிதிப் பரிமாற்று அட்டைகளைப் பயன்படுத்துவதன் மீது சில வங்கிகள் சில கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலத்திரனியல் நிதிப் பரிமாற்று அட்டைகளைப் பயன்படுத்தி சட்டரீதியான கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்வதில் எவையேனும் இடர்பாடுகளை அவர்கள் எதிர்கொள்வார்களாயின் தொடர்புடைய வங்கிகளை தொடர்புகொள்கின்ற அதேவேளை தற்போது வெளிநாட்டுச் செலாவணியை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பொதுமக்களை மத்திய வங்கி கோருகின்றது - என்றுள்ளது.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவால் உயிரிழப்பவர்களை எரிக்க மன்னாரில் மின் தகன நிலையம் தேவை

## அதிகாரிகள் கூட்டாக கோரிக்கை

மன்னார், ஓக. 23

**மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களை தகனம் செய்வதற்கு மின்சார தகன நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மாவட்டச் செயலர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன பணிப்பாளர் ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் இறந்த உடல்களை தகனம் செய்வதற்கு வவுனியா அல்லது வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் உயிரிழந்தவர்களின் உறவுகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே மன்னார் மாவட்டத்தில் தகன நிலையம் ஒன்றை அமைப்பது அவசியம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக கொரோனாத் தொற்றால் தொடர்ச்சியாக உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இவ்வாறான நேரங்களில் இறந்தவரின் உறவுகளும் சுகாதாரத் துறையினரும் பெரும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இறந்த உடல்களை வவுனியாவில் தகனம் செய்வது வழக்கம். மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் இறப்பவர்கள் அனைவரையும் வவுனியாவில் தகனம் செய்வதால் மன்னாரிலிருந்து உடல்களை வவுனியா கொண்டு செல்வதற்கு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கொரோனாத் தொற்று அதிகரித்து செல்கின்ற இந்த சூழ்நிலையில் மன்னார் மாவட்டத்தில் தகன நிலையம் ஒன்று உருவாக்கப்படும் போது அனைத்து தரப்பினருக்கும் நன்மை பயக்கும் விடயமாக இது இருக்கும் -என்றார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க உயிரிழப்புகள் தவிர்க்க முடியாததாகி வருகிறது.

இறப்பு ஒன்று ஏற்படும்போது அதனை எரிப்பதற்கோ, புதைப்பதற்கோ மன்னாரில் எந்த ஒரு வசதியும் இல்லை. இதனால் உடலை எரிப்பதற்கு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படுவதால் சுகாதாரப் பணியாளர்கள் தேவையில்லாமல் முழுநாளும் வவுனியாவுக்கு சென்று வருவதில் நேரத்தை செலவழிக்க வேண்டியுள்ளது. -என்றார்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் மின்னியல் தகன நிலையம் ஒன்று அமைப்பது காலத்தின் கட்டாயம். இது இன்றைய கொரோனா உயிரிழப்புக்கு மட்டுமல்ல எதிர்காலத்திலும் இவ்வாறான ஒரு தகனமேடை மன்னார் மாவட்டத்துக்கு அத்தியாவசியமாக காணப்படும்.

ஏனெனில் இனி வரப்போகும் மழை காலங்களில் மரணிக்கும் உடல்களை எரி ஊட்டுவதற்கு பெரும் சிரமங்கள் ஏற்படும் போது இவ்வாறான மின் தகனமேடை பொது மக்களுக்கு உதவியாக இருக்கும் -என்றார். (ஐ-213)



# சுத்திகரிப்பு இயந்திரம் கையளிப்பு

மன்னார், ஓக.23

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று மன்னார் அடைக்கலம் அறக்கட்டளை அமைப்பால் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்துவதற்காக இந்த இயந்திரம் நேற்றுமுன்தினம் மருத்துவமனைப் பணிப்பாளர் செந்தூர்பதிராஜாவிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-213)

# 5 வீடுகளின் சீரமைப்புக்கு தலா ரூ.2 லட்சம் ஒதுக்கீடு

சாவகச்சேரி,ஓக. 23

சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சமூர்த்திப் பயனாளிகள் ஐவருக்கு வீடுகள் சீரமைக்க தலா 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதேசத்தில் நிரந்தர வீடற்ற பயனாளிக்கு ஆறு லட்சம் ரூபா செலவில் வீடு அமைக்கப்பட்டு வருகிறது.

திணைக்களத்தின் விசேட செயற்திட்டத்தின் கீழ் வீடுகள் சீரமைப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் அந்தந்தப் பிரிவு சமூர்த்தி அபிவிருத்தி அலுவலரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-9)





# அஞ்சல் அலுவலகத்தை சீரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு,ஓக.23

நீண்டகாலமாக சீரமைப்பின்றி பாழடைந்து இருக்கும் புத்துவெட்டுவான் கிராமத்துக்கு சொந்தமான அஞ்சல் அலுவலகத்தை புதுப்பித்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

புத்துவெட்டுவான் கிராமத்துக்கான உப அஞ்சல் அலுவலகம் போருக்கு முன்னரான காலத்தில் இருந்து தபாலக வீதியில் இயங்கிவந்தது.

போருக்கு பின்னர் பல்வேறு கட்டடங்களில் தற்காலிகமாக இயங்கி வந்த நிலையில் தற்போது தபாலகம் மருத்துவ தாதிகளின் விடுதியில் ஒரு சிறிய அறையில் இயங்கிவருகின்றது.

இந்த நிலையில் தபாலகத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமத்தில் உள்ள மக்கள் மின்சாரக் கட்டணம் செலுத்துவது, முதியோர் கொடுப்பனவு ,சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு போன்ற செயற்பாடுகளை இந்தத் தபாலகத்தின் ஊடாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

தபாலகத்துக்கான காணி இருந்தும் கட்டடம் இருந்தும் பாழடைந்த நிலையில் இருக்கின்றது. இதனைப் புதுப்பித்து இயங்க வைக்க தபால் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். -என்றனர். (ஐ-19)

# ஓய்வுபெறும் அதிபருக்கு மணி விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 23



தென்மராட்சி கல்வி வலயத்தில் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய அதிபராக கடந்த மூன்று ஆண்டுகளாக செயற்றிறன் மிக்க பணியாற்றி வந்த தா. கணேசபாலேந்திரனின் மணி விழா நிகழ்வு பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அண்மையில் இடம்பெற்றது.

மந்துவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கணேசபாலேந்திரன், மந்துவில் சிறி பாரதி வித்தியாலயத்திலும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவர்.

மன்னார் இலுப்பக்கடவை அ.த.க. பாடசாலையில் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றிய இவர் 2005ஆம் ஆண்டு கைதடி குருசாமி வித்தியாசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், மட்டுவில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றிலும் அதிபராக கடமையாற்றியுள்ளார்.

இவர் இறுதியாக பாடசாலை அதிபராக இருந்த கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய ஆசிரிய குழாமினால் இவரது மணி விழா நிகழ்வுகள் அண்மையில் நடத்தப்பட்டிருந்தன. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இந்த தலிபான்கள்?
# அவர்களுக்கு என்ன வேண்டும்?

ஆங்கிலத்தில் :
எரிக் நாகோர்ணி -
நன்றி : தி இந்தியன் எக்ஸ்பிரஸ்
தமிழில் : மோகன் வயித்திலிங்கம்.

**1989** இல் ஆப்கானிலிருந்து சோவியத் படைகள் விலகிக் கொண்ட பிறகு.......... 1994 இல் தலிபான் முளைவிடத் தொடங்கியது. தலிபான்களின் ஆரம்பம் தெற்கு ஆப்கானிலுள்ள முக்கிய மாகாணமான கந்தகார் என்று சொல்லப்படுகிறது.
1995 இல் குளிர்காலத்தே, நியூயோர்க் ரைம்ஸ் செய்தித் தொடர்பாளர் ஆப்கானுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அப்போது அங்குள்ள நிலைமை பற்றி அவர் விளக்கும்போது "பல வருட மிருகத்தனமான உள்நாட்டு மோதல்களுக்குப் பிறகு, ஒரு பெரிய மாற்றம் தோன்றியிருக்கிறது. இஸ்லாமியத் தூய்மைவாதிகள் மற்றும் ஆப்கானிஸ்தான் தேசபக்தர்கள் என்று தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் ஒரு புதிய படையினர் எதுவித எதிர்ப்புமின்றி நாட்டின் 40% க்கும் அதிகமான பகுதியைத் தமது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கின்றனர் - என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**பாகிஸ்தானுக்கு தலிபானுடனான நீண்டகால உறவு**

எண்ணுவதற்கு ஆச்சரியமாக இருந்தது. தலிபான் படையிலுள்ள பல போராளிகள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் ஆயுதங்களைத் தமது கையில் எடுப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பதாக மதக் கல்வியைக் கற்றுக் கொள்ள முனையும் மாணவர்களை விடச் சற்று அதிக மதப் பற்றாளர்களாகக் காணப்பட்டனர். அங்கே அவர்கள் மாணவர்கள் எனப்பட்டனர். ஆனால் தங்களைத் தாங்களே தலிபான்கள் என அழைத்துக் கொண்டனர். ஒரு காலத்தில் மாணவப் புரட்சியாளர்கள் எனச்சொன்னவர்கள்.......... கால் நூற்றாண்டுக்குப் பிறகு, பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்ற ஒரு போரில் ஒரு சர்வதேச இராணுவக் கூட்டணியை விஞ்சிய பிறகு, இப்போது நிலத்தின் ஆட்சியாளர்களாக மாறி உள்ளனர்.

**தலிபான்களின் எழுச்சி எப்படி தஜிகிஸ்தானை அடையாளப்படுத்தியது?**

1979 இல் ஆப்கானிஸ்தானில் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை ஆதரிக்க சோவியத் யூனியன் அதன்மீது படையெடுத்தது. பின்னர் அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இறுதியில் தங்கள் விருப்பத்தை அந்த நாட்டின் மீது திணிக்க முயன்ற இரு வல்லரசுகளும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதே வரலாறாகி நிற்கிறது.
அமெரிக்க அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்ட கிளர்ச்சிப் பிரிவுகளின் இணைப்பான முஜாஹதீன் என்று அழைக்கப்படும் இஸ்லாமிய போராளிகளால் சோவியத் தோற்கடிக்கப்பட்டது, அங்கு மறைமுகமாக இயங்கியது அமெரிக்கா. சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு பனிப்போரை நடத்துவதில் அமெரிக்கா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனாலும் அந்த மகிழ்சி நீடித்ததாக இல்லை. ஏனெனில் ஆப்கான் போராளிகளுக்கிடையே தோன்றிய அதிகாரப் பற்றினால் அவர்களுக்கிடையே ஏற்பட்ட பிளவுகளும் ஒரு காரணமாயிற்று. அதனால் நாடு போர்க்குணம் கொண்டது. அது ஒரு கொடூரமான உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது.
இந்தப் பின்னணியில், தலிபான்கள், இஸ்லாமிய உணர்வுகளுக்கு முதலிடம் அளிப்பதாகவும், குழு ரீதியாக ஏற்பட்ட அதிகாரச் சண்டைக்கு வழிவகுத்த ஊழலை எதிர்த்துத் தாம் போராடுவதாகவும் உறுதியளித்தனர். அதனால் அவர்கள் மக்கள் பால் ஈர்க்கப்பட்டனர். பல மாதங்களாக நடைபெற்ற கடுமையான சண்டையின் பின்னர் அவர்கள் நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

**தலிபான்கள் எப்படி ஆட்சி செய்தனர்?**

1996 இல், ஆப்கானைத் தலிபான்கள் இஸ்லாமிய எமிரேட் என்று அறிவித்து, குர்ஆனுக்கு கடுமையான விளக்கத்தைத் தந்தனர். அதன்படி கசையடி கொடுத்தல், தலை வெட்டுதல் மற்றும் வெகுஜன மரணதண்டனை உள்ளிட்ட மிருகத்தனமான பொதுத் தண்டனைகளுடன் சட்டத்தை அமுல்படுத்தினர். மேலும் அவர்கள் பெண்களுக்குரிய சட்ட திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களின் சமூகப் பங்களிப்பைக் குறைத்ததோடு அவர்களுக்கான பள்ளிக் கல்வியையும் மறுத்தனர். மதத்தில் போட்டி நடைமுறைகளைப் பொறுக்க முடியாது என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்தினர். அதன் வழி 2001 ஆம் ஆண்டின் முற்பகுதியில், உலகப் பிரமிப்புப் பொருள்களான பாமியன் என அழைக்கப்டும் உயரமான பெரிய புத்தர் சிலைகளை அழித்தனர். தமது மதக் கோட்பாட்டின்படி அவைகளை அவதூறாகக் கருதினர், மேலும் அவைகளின் அழிப்புப் புனிதமானது என்று பெருமை பேசித் தம்மை நியாயப்படுத்திக் கொண்டனர்.
போராளிகளின் நடவடிக்கைகளைக் கவனித்த ஆப்கான் தகவல் மற்றும் கலாச்சார அமைச்சர் "ஒன்றைக் கட்டுவதை விட அழிப்பது எளிது, என விவரித்தார். அப்போ அங்கு அமைச்சுக்கள் மற்றும் அதிகாரத்துவம் உட்பட ஒரு நவீன அரசாங்கத்தின் கட்டமைப்பு இருந்தது. ஆனால் உள்ளூர் மட்டத்தில், மதக் கட்டளைகளும், தனிப்பட்ட தலிபான் தளபதிகளின் விருப்பமுமே ஆப்கானியர்களின் அன்றாட வாழ்க்கையை தீர்மானித்தது. இருந்தும் அவர்களால் முழு நாட்டையும் கட்டுப்படுத்த முடியவில்லை. வடக்கு ஆப்கானில் பல முஜாஹதீன் தளபதிகள் ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருந்தனர், தலிபான்களுக்கு எதிர்ப்புள்ள கோட்டைகளாக அவை காணப் பட்டன.



**தலிபான்களின் ஆட்சியில் பெண்களுக்கான ஆட்சி அதிகாரம் எப்படி இருந்தது, இருக்கும்?**

பெண்களைப் பொறுத்தவரை தலிபான்கள் ஒரு புதிய சித்தாந்தத்தைக் கடைப்பிடித்தனர். பெண்கள் சமூகத்தில் தம்மைச் சுற்றியுள்ள குடும்பச் சூழலில் ஒரு வரையறைக்குட்பட்டு சிறிய பங்கினை மட்டுமே வகிக்க வேண்டும் என அவர்களின் எதிர்பார்த்தனர்.
கடைசியாக அவர்கள் ஆட்சி செய்தபோது, பெண்கள் மற்றும் சிறுமிகள் பள்ளிக்குச் செல்வதற்கும் பணிபுரிவதற்கும் தடை விதித்தனர். முகத்தை மறைக்காமல் வீட்டுக்கு வெளியே காணப்பட்ட பெண்கள் கடுமையான தண்டனையை எதிர்கொண்டனர். திருமணமாகாத பெண்களும் ஆண்களும் ஒன்றாகக் காணப்படுவது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது.
தலிபான் அரசாங்கம் அமெரிக்க தலைமையிலான கூட்டணியால் வீழ்த்தப்பட்ட பிறகு, ஆப்கானிஸ்தானில் பெண்களின் நிலை மாறியது. அவர்கள் வெற்றிகளைப் பெற்றனர். ஆனால் இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, தலிபான்களுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி தமது படையை திரும்பப் பெறும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அதனால் பல ஆப்கானிஸ்தான் பெண்கள் தமது தகமைகளையும் வெற்றிகளையும் இழந்துவிடக்கூடும் என்று அஞ்சுகின்றனர்.
ஓர் உதாரணத்துக்குச் சொல்வதாயின், தலிபான் போராளிகள் கடந்த ஜுலையில் கந்தஹாரில் உள்ள ஒரு வங்கீயில் நுழைந்து அங்கு வேலை செய்யும் ஒன்பது பெண்களை வெளியேறும்படி உத்தரவிட்டனர். அந்த இடங்களை அவர்களது ஆண் உறவினர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த மாதத்தில் வடக்கு நகரமான குண்டூஸில், நகரத்தின் புதிய தலிபான் ஆட்சியாளர்கள் அரசாங்கத்தில் வேலை செய்யும் பெண்கள் தங்கள் வேலைகளை விட்டுவிட வேண்டும் என்றும் மறுபடியும் வேலைக்குத் திரும்ப வேண்டாம் என்றும் உத்தரவிட்டனர்.


**அமெரிக்கா ஏன் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது?**

தலிபான்கள் ஆட்சியில் இருந்தபோது, சவுதி அரேபியாவில் பிறந்த முன்னாள் முஜாஹதீன் போராளியான ஒசாமா பின்லேடனுக்கு ஆப்கானிஸ்தானை பாதுகாப்பான ஒரு உறைவிடமாக மாற்றினர். அதே சமயம் ஒசாமா பின்லேடன் உலகளாவிய ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய அல் ஹொய்தா என்ற ஒரு பயங்கரவாதக் குழுவை உருவாக்கினார் அந்த அமைப்பே செப்ரெம்பர் 11, 2001 அன்று, உலகை உலுக்கிய நாசகார நடவடிக்கைகளைச் செய்ததாக அறிவித்தது., நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையக் கோபுரங்கள் இடிக்கப்பட்டன. வாஷிங்டனில் உள்ள பென்ரகனைச் சேதப்படுத்தியது. அதனால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
அதனால் தலிபான்கள், பின்லேடனைத் தம் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று அதிபர் ஜோர்ஜ் புஷ் கோரினார். தலிபான்கள் மறுத்தபோது, அமெரிக்கா படையெடுத்தது. தலிபான் எதிர்ப்பு கூட்டணிக்குள் இருந்த முன்னாள் முஜாஹதீன் குழுக்களுடன் சேர்ந்து ஒரு வான்வழித் தாக்குதல் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டு, அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் விரைவில் தலிபான் அரசை வீழ்த்தினர்.
உயிர் தப்பிய அல்கொய்தா மற்றும் தலிபான் அதிகாரிகளில் பெரும்பாலானோர் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்றனர். தற்போது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கா வெளியேறுவதற்கு எனச் செய்யப்பட்ட ஒப்பந்தத் தூதுக்குழுவில் பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்ற தலிபான் அதிகாரிகள் சிலர் இருந்தனர் என்றும் அவர்கள் நாட்டின் புதிய ஆட்சி அதிகாரத்தில் அங்கம் வகிப்பர் என்றும் சொல்லப்படுகிறது.

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சேதுபதிக்கு ஜோடியாகும் ஷிவானி



பிக்பாஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராகக் கலந்து கொண்டவரும் சின்னத்திரை தொலைக்காட்சி தொடர் நடிகையுமான ஷிவானி நாராயணன் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கும் 'விக்ரம்' திரைப்படத்தில் இணைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

க்ரைம் திரில்லர் பாணியில் உருவாகும் இந்தப் படத்தில் ஃபஹத் பாசில், விஜய்சேதுபதி அர்ஜுன் தாஸ் மற்றும் நரேன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்த நிலையில் இந்தப் படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக ஷிவானி நாராயணன் நடிக்கவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



## மெஸ்ஸி துடைத்த 'ரிஷ்யூ' ஒரு மில்லியன் டொலருக்கு ஏலம் போகிறதா?

பிரபல கால்பந்து வீரர் மெஸ்ஸி தனது கண்ணீரை துடைத்து போட்ட 'ரிஷ்யூ' பேப்பர் ஒரு மில்லியன் டொலருக்கு ஏலம் போய் இருப்பதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


கடந்த 17 ஆண்டுகளாக பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்த மெஸ்சி ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததால் அந்த அணியில் இருந்து விலகினார். பிரிவு உபசார விழாவின்போது மெஸ்சி கண்ணீர் வடித்து பேசினார் என்பதும் அப்போது அவர் கண்ணீரை துடைப்பதற்காக பயன்படுத்திய ரிஷ்யூ பேப்பர் தற்போது ஏலம் போய் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த ரிஷ்யூ பேப்பர் ஒரு மில்லியன் டொலருக்கு ஏலம் விடப்பட்டு உள்ளதாக அர்ஜெண்டினாவை சேர்ந்த பிரபல இணையதளம் செய்தி வெளியிட்டு உள்ளது.

இந்த நிலையில் மெஸ்சி கண்ணீரை துடைத்து போட்ட டிஷ்யூ பேப்பரில் இருந்த அவருடைய டிஎன்ஏவை எடுத்து குளோனிங் முறையில் பல மெஸ்சிக்களை உருவாக்க பார்சிலோனா அணி திட்டமிட்டுள்ளதாகவும் வதந்தி ஒன்று பரவி வருவதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒருவேளை உண்மையாகவே 'மெஸ்சியின் டிஷ்யூ பேப்பர் ஏலம் விடப்பட்டிருந்தால் மெஸ்ஸி தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு வரும் என்று கூறப்படுகிறது.




## twitter

கோழியின் கிறுக்கல்!!

கைப்பேசியை எடுத்து செல்லாமல் இருந்தால்,
கழிவறையில் செலவழிக்கும் நேரம் வெகுவாகக்
குறைந்து விடுகிறது!!

ஷேக்பரித்@

ஆண்களுக்கு 'நகைச்சுவை' உணர்வு அதிகம்.
பெண்களுக்கு 'நகை சுவை' உணர்வு அதிகம்..

கடைநிலை ஊழியன்@


அடுத்த வேளை என்ன சாப்பிடலாம் என
எண்ணும் மக்கள் ஒரு பக்கம் !!
அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்ன வழி
என்று எண்ணும் மக்கள் ஒரு பக்கம் !!

Sundar Antony@

வலைகள் எங்கிருந்து
வந்தால் என்ன....
[illegible]
இருக்கிறது...!!




# இன்றைய நாள்



**மேடம்:** நிம்மதி அடைவீர்கள். பயம் தீரும். சாதனைக்கு முயல்வீர்கள். சேமிப்பு உயரும். புதிய திட்டம் ஒன்று நிறைவேறும். உயர் கல்வி, பணிநிலை குறித்து இன்று யோசிப்பீர்கள்.

**இடபம்:** முன்பு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்ச்சியடைவீர்கள். வெளிநாட்டில் உள்ள குழந்தைகளின் மூலம் நல்ல செய்தி வரும். வியாபாரம் சூடு பிடிக்கும். பெண்களின் கவலை தீரும்.

**மிதுனம்:** உங்களின் முயற்சிகளில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உங்கள் மீது அக்கறை உள்ளவர்கள் வீண் பழி சொன்னால் கவலை வேண்டாம். குடும்பத்தினர் உதவிகரமாக நடந்துகொள்வர்.

**கடகம்:** உங்கள் செயலால் சிரமம் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பலகாலம் மனதை அரித்துக்கொண்டிருந்த கவலை நீங்கும். மற்றவர் தலையீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

**சிம்மம்:** உங்களின் பலகாலப் பொறுமைக்கு இன்று பெருமை கிடைக்கும். செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். கனவு நனவாகும். தியானம், மனதுக்கு புத்துணர்வு தரும்.

**கன்னி:** கடன் சுமை குறைவதற்கு அக்கறையுள்ளோர் உதவுவர் .வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரலாம். சிக்கல் நீங்கும். நெருங்கிய நண்பர்களுக்கிடையே மனஸ்தாபங்கள் நீங்கும்.

**துலாம்:** வளர்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு. வருங்கால நலன் பற்றிய முயற்சியில் வெற்றி கிட்டும். நண்பர்களுக்கிடையே பிரச்சினையை தீர்த்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களுக்கு உதவிகரமாக இருந்து மகிழ்விப்பீர்கள். சருமம் சம்பந்தப்பட்ட சிரமத்துக்குத் தீர்வு கிடைக்கும். எதுபற்றி பயந்தீர்களோ அந்த விஷயம் நல்லபடியாக முடியும்.

**தனுசு:** நிம்மதி தரும் நாள். மனச்சுமை குறையும் நாள். உறவினர்களுடன் கவனம் தேவை. பிள்ளைகளால் மனம் மகிழும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**மகரம்:** உறவை ஒட்டுவதில் ஆர்வம் கூடும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நவீன பொருட்கள் வாங்குவதில் அதிக செலவு செய்வீர்கள். பெற்றோருக்கு ஏற்பட்ட சிரமம் குறையும்.

**கும்பம்:** பணத்தேவை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். வாழ்க்கைத்துணை உங்களை பாராட்டுவார். பழைய பகைவர் மனம் மாறுவார்.


**மீனம்:** நண்பர்கள் மூலமாக புதியவரின் அறிமுகம் கிடைக்கும். புதிய் நபருடன் நட்பை இறுக்க ஆர்வம் காட்டுவீர்கள். புதிய விஷயங்களில் ஆர்வம் செலுத்தி கற்றுக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் கோழி குஞ்சுகள்
ஒரு நாள் ஊர் கோழி குஞ்சுகள்
விற்பனைக்கு
077 3322433

# அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க பொறிமுறை!

## இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவிப்பு



கொழும்பு, ஒக.23

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கான பொறிமுறையொன்றை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக 10 நாள்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் போது மக்களுக்கு நெருக்கடிகள் ஏற்பாத வகையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெ டுப்பதற்கான பொறிமுறையொன்றை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைய அரசியல்வாதிகளுடன் அரச அதிகாரிகள் இணைந்து செயற்படுகின்றனர்.

இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காக மாவட்ட மற்றும் கிராம மட்டத்திலும், கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையிலும் வருமானம் ஈட்டும் வழிமுறைகள் சரிவடைந்துள்ளதால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான பின்னடைவுகள் ஏற்பட்டாலும் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஏ-இ)

# 452 பேர் கைது

கொழும்பு, ஒக. 23

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 452 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட் டில் இதுவரை 56 ஆயிரத்து 294 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நிறுவப்பட்டுள்ள வீதித் தடையில் நேற்றுமுன்தினம் 639 வாகனங்களும் மற்றும் ஆயிரத்து 128 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.இ)

# பி.சி.ஆர். முடிவு வரும் வரை வெளியில் நடமாடவேண்டாம்

கொழும்பு, ஒக. 23

காய்ச்சல் மற்றும் ஏனைய நிலைமைகளால் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வோர் இறுதிப் பெறுபேறு கிடைக்கும் வரை வீடுகளில் தங்கியிருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

தற்சமயம் அதிக எண்ணிக்கையிலானோர் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள். அவர்களில் இறுதி அறிக்கை கிடைக்க முன்னர் தொழிலுக்குச் செல்பவர்களால் பெரிய பாதிப்பு ஏற்படுகின்றது என்று சுகாதாரத்துறை யினர் கவலை வெளியிட்டுள்ளனர். (ஒ.இ)



# கானியின் சகோதரர் தலிபானுக்கு ஆதரவு

காபூல், ஒக. 23

ஆப்கான் அதிபர் அஷ்ரப் கானியின் சகோதரர் தலிபான்களுக்கு தனது ஆதரவை வழங்கி உள்ளார். ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய நிலையில், அங்கு தலிபான் தீவிரவாதிகளுக்கும், அந்த நாட்டு இராணுவத்துக்கும் இடையே கடும் போர் நடைபெற்று வந்தது. இதில் ஆப்கானிஸ்தானின் முக்கியப் பகுதிகளைத் தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் தலைநகர் காபூலையும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து ஆப்கான் அதிபர் அஷ்ரப் கானி ஆப்கானிலிருந்து தப்பிச் சென்றார். ஆப்கனிலிருந்து வெளியேறிய அஷ்ரப் கானி தற்போது தனது குடும்பத்தினருடன் கட்டாரில் உள்ளார்.

இந்த நிலையில் அஷ்ரப் கானியின் சகோதரர், தலிபான்களுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளார். அஷ்ரப் கானியின் சகோதரரான ஹஷ்மத் கானி அஹ்மத்ஸாய், தலிபான் தலைவர் கலீல் உர் ரஹ்மான் மற்றும் மதத் தலைவர் முப்தி மஹ்மூத் ஜாகிர் முன்னிலையில் தலிபானுக்கு தனது ஆதரவை அறிவித்தார் என்று ஆப்கான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# மரண அறிவித்தல்



## திருமதி குணசிங்கம் இராசலட்சுமி

யாழ் வண்ணார்பண்ணை தட்டாதெருவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணசிங்கம் இராசலட்சுமி கடந்த (21.08.2021) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குணசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசேஸ்வரி, அன்னலட்சுமி, மங்கையற்கரசி மற்றும் கோபால கிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும், பிரதீபன், கதிர்காமநாதன், பிரேம்நாத், தயாளினி, ரிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 07 . 1949



இறப்பு 22 . 08 . 2021

## திரு. சுப்பையா யோகேஸ்வரன்

(உப அதிபர், வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்)

(ஓய்வு பெற்ற கணித ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி - காரைநகர், விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி - நீர்கொழும்பு, கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

யாழ். காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் மணப்பிட்டி காரைநகர், வவுனியா இல.100, தோணிக்கல் வீதியை வதிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா யோகேஸ்வரன் அவர்கள் 22-08-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சுப்பையா (ஓய்வு பெற்ற அதிபர்) பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் சுப்பிரமணியம் (பிரபல வர்த்தகர் -VTA பசறை), விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலமலர் அவர்களின் அன்பு கணவனும், நகுலேஸ்வரன், பரமேஸ்வரி, நிமலேஸ்வரன், கமலேஸ்வரி, லோகேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, பரமேஸ்வரன், ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமரகுருநாதன், காலஞ்சென்ற பரமகுருநாதன், பவளமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிதா (லண்டன்), யோகமதி (தகவல் தொழில்நுட்ப ஆசிரியை V/CCTMS), பிரகலாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம் (மாகாணம்) வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சாங்ககுமார் (லண்டன்), பாலமுரளி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் வவுனியா), வேணுயா ஆகியோரின் பாசமிகு மாமானரும் வருணி ஆரணி, ஆரவி, அபிநயா ஆகியோரின் பாசமிகு அம்மாப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 23.08.2021) திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

**தொடர்புகளுக்கு :**

| | |
|---|---|
| பிரகலாதன் - மகன் | +94 773 444 558 |
| பாலமுரளி - மருமகன் | +94 770 046 892 |
| நகுலேஸ்வரன் - சகோதரர் | +94 776 206 229 |
| நிமலேஸ்வரன் - சகோதரர் | +94 777 762 274 |
| லோகேஸ்வரன் (கனடா) - சகோதரர் | +1 416 519 4523 |
| பரமேஸ்வரன் - சகோதரர் | +94 776 183 205 |

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### கிராம...

நிலையில் புளியங்குளம் பிரதேச மருத்துவமனையில் நேற்று அன்டிஜென் பரிசோதனையை முன்னெடுத்தார். இதன்போதே அவருக்குக் கொவிட் உள்ளமை தெரிய வந்தது. இதையடுத்து அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-110)

### உயிரிழந்த....

னையில் கொவிட் உறுதிப்படுத்தப்பட்டது. 61 வயதான குறித்த முதியவர் வவுனியா வைத்தியசாலையின் சிற்றூழியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-110)

### 2,000 ரூபா...

யில், நாட்டைத் தற்காலிகமாக மூடியதன் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவைச் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அது தொடர்பான அறிவுறுத்தல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. நிவாரணம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் குறித்த கணிப்பீடுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவை குறித்த விபரங்கள் திரட்டப்பட்ட பின்னர் கொழும்புக்கு அனுப்பவுள்ளோம். விரைவில் குறித்த நிவாரண நிதியைக் கையளிக்கக்கூடியதாக இருக்கும். இதனைப் பெறுவதற்கு 57 ஆயிரம் குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளன. இதில் சில மாற்றங்கள் ஏற்படலாம் என்றார். (ம-26)

# 100 தொன் ஒட்சிசன் நேற்று இந்தியாவிலிருந்து வந்தது

கொழும்பு, ஓக. 23

**இந்தியாவின் விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 100 தொன் மருத்துவ திரவ ஒட்சிசனை ஏற்றிய இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 'சக்தி' எனும் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்றுப் பிற்பகல் வந்தடைந்துள்ளது.**



குறித்த கப்பலை வரவேற்க, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன மற்றும் இந்தியப் பிரதித் தூதுவர் வினோத் கே.ஜெகொப் ஆகியோர் கொழும்புத் துறைமுகம் சென்றிருந்தனர்.

இலங்கையால் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட குறித்த ஒட்சிசனை ஏற்றிய குறித்த கப்பல், கடந்த வியாழக்கிழமை இந்தியாவின் விசாகப் பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கையை நோக்கிப் புறப்பட்டு நேற்று பிற்பகல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இதேவேளை, மேலும் 39 தொன் ஒட்சிசனைக் கொண்டு வருவதற்காக இந்தியா சென்ற 'சக்தி' எனும் அதே பெயரைக் கொண்ட இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் இன்று காலை கொழும்பை வந்தடையவுள்ளது எனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கப்பல் கடந்த 17ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்திலிருந்து புறப்பட்டு மறுநாள் 18ஆம் திகதி சென்னைத் துறைமுகத்தை சென்றடைந்தது.

இலங்கையில் கொரோனா டெல்டா திரிபு தொற்றைக் கொண்ட தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளர்களுக்கு அவசியமான ஒட்சிசன் தேவையை ஈடுசெய்ய குறித்த ஒட்சிசன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. (ம-22)

## ஊடகவியலாளர் லாபிர் மாரடைப்பால் மறைவு!

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கலாபூசணம் மீரா லெப்பை லாபிர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாரடைப்பால் காலமானார்.



இவர் மானிப்பாய் வீதி பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். பிளவ்ஸ் ஹாஜியார் பவுண்டேசன் என்னும் அமைப்பின் மூலம் பல சமூகப்பணிகளையும் லாபிர் ஆற்றி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## தொற்றாளர்களால் நிரம்பியது களுபோவில மருத்துவமனை

கொழும்பு, ஓக. 23

கொழும்பு களுபோவில மருத்துவமனையின் 7 விடுதிகளில் 300இற்கும் அதிகமான கொரோனா நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சைப் பெற்று வருவதாக மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் இடப்பற்றாக்குறை தற்போது உச்ச அளவில் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுமட்டுமன்றி பணிக்குழாமில் 30 பேர்வரை தொற்றுக்கு இலக்காகியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.இ)

முன்னாள் பிரபல விளையாட்டு வீரர்களான

## தந்தையையும் மகனையும் காவுகொண்டது கொரோனா

கொழும்பு, ஓக. 23



கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரரும் கல்லூரியின் கிரிக்கெட் கழக உறுப்பினருமான சுல்கி மொஹமட் மற்றும் அவரது தந்தையான மருதானை சாஹிரா கல்லூரியின் முன்னாள் பிரபல ரக்பி வீரர் இப்ராஹிம் ஹமீட் ஆகியோர் இரண்டு நாள்களுக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் வசித்து வந்த சுல்கி மொஹமட் நேற்றுமுன்தினமும், அவரது தந்தை இப்ராஹிம் ஹமீட் கடந்த வெள்ளிக்கிழமையும் உயிரிழந்துள்ளனர்.

1991 1992 காலப்பகுதியில் சுல்கி மொஹமட் கொழும்பு றோயல் கல்லூரியின் கிரிக்கெட் அணியில் விளையாடியிருந்த பிரபல வீரராவார். இவர் ஒரு விக்கெட் காப்பாளரும், சிறந்த துடுப்பாட்ட வீரரும் ஆவார்.

சுல்கியின் தந்தை இப்ராஹிம் ஹமீட் மருதானை சாஹிரா கல்லூரியின் பிரபல ரக்பி வீரராவார். 1971ஆம் ஆண்டு காலப் பகுதியில் பொலிஸ் ரக்பி அணிக்குத் தலைமை வகித்தவர். இவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தனது பணியை நிறைவு செய்துள்ளார். இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியாகவும் செயற்பட்டார்.

தந்தையும் மகனும் சமீபத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர். ஒரு வாரமாக மருத்துவமனையில் இருந்து சுல்கி மொஹமட் கடந்த 19ஆம் திகதி வீடு திரும்பியிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்திருந்தார். (ம-22)

# சிவன் அருள் இல்லத்தில் 26 பேருக்குக் கொரோனா

## சனிக்கிழமை 46 தொற்றாளர்கள்

மன்னார், ஓக. 23

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் மன்னார் திருக்கேதீச்சரம் சிவன்அருள் இல்லத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் பணியாளர்கள் என 26 பேர் கொரோனாத்தொற்றாளர்களாக நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் மாவட்டத்தில் மேலும் 20 பேர் தொற்றாளர்களாக அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்றுக்காலை விடுத்த கொரோனா நிலவர அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இல்லத்தைச் சேர்ந்தவர்கள் தவிர, ஏனையவர்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை, முருங்கன் மருத்துவமனை, அடம்பன் மருத்துவமனை, பேசாலை மருத்துவமனை, விடத்தல் தீவு மருத்துவமனை, மாந்தை மேற்கு மற்றும் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுதவிர, கடந்த முதலாம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை 399 கொரோனாத் தொற்றாளர்களும், இந்தவருடம் மாத்திரம் ஆயிரத்து 423 தொற்றாளர்களுமாக, மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 440 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 13 கொரோனா உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன என்று குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

| தாயின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 20 . 02 . 1969 | | 22 . 08 . 2021 |



எமது கல்லூரியின் ஆசிரியை

## செல்வி கலாதேவி பாலசுந்தரம் S.L.T.S-1

(B.A, P.G.D.E, M.A(TAMIL), M.A(EDU)

**அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகவும் மனவருத்தம் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

காலன் அவன் உம் உயிரைக் காவுகொண்ட செய்தி கேட்டு
கதிகலங்கி நிற்கின்றோம். உம் உறவுகளாய்
கருணை உள்ளம் கொண்ட கலாதேவி ஆசானே!
கணப்பொழுதும் உம்பணியைக் கண்ணியமாய்ச் செய்தீரே!
தெள்ளிய தண் தமிழை அழகு மொழி நடையில்
அன்புச் செல்வங்களுக்கு தெவிட்டாது கொடுத்தீரே!
அனைவரையும் அன்புடனே அரவணைத்துச் செல்வீரே!
அமைதியாய் இன்று விழிமூடிச் சென்றீரே!
அணையாது அகல்விளக்காய் எங்கள் உள்ளங்களில் இருப்பீரே!
ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!

**துயர் பகிரும்**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**
**- சண்டிலிப்பாய்.**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 . 04 . 1939 | | 22 . 08 . 2021 |



## திருமதி வடிவாம்பாள் பரராசசிங்கம்

**(வடிவக்கா)**

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைப் பிறப்பிடமாகவும், சிவசக்திவாசா, கட்டைப்பிராய் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வடிவாம்பாள் பரராசசிங்கம் அவர்கள் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரராசசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ரகுமார் (ஆசிரியர்-யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), சுகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், துஷ்யா (ஆசிரியர்-யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), அஜேந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், பரிஷித், தருண், அவனீஷ், ஷப்தவி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி. | சிவசக்தி வாசா, கட்டைப்பிராய், கோப்பாய் தெற்கு. | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|---|

# மரண அறிவித்தல்

## அமரர் தங்கம்மா பொன்னம்பலம்



மறவன்புலவைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தங்கம்மா பொன்னம்பலம் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா உலகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, யோகாம்பிகை மற்றும் அருணாசலம் (நியூ கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கைதடிச் சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னம்மா, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரியும், சுபத்திரா-பூபாலரதன் (வவுனியா), சேத்திரபாலன்-சுதர்சினி (பிரான்ஸ்), புவனலோஜினி-பிரபாகரன் (பிரான்ஸ்), கிருஸ்ணபாலன்-தாரணி (பிரான்ஸ்), கௌரி-நரேஸ் (மறவன்புலவு), சங்கர், தனுஷியா-விகர்ணன் (பிரான்ஸ்), வக்சலா-உதயகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியாரும், துளசிகன் (வவுனியா), அபிரா, ஆர்த்திகன் (பிரான்ஸ்), அகர்சன், ஆருஷன் (பிரான்ஸ்), சாருஜி, சானுகா (மறவன்புலவு), விதுனா, கரிஸ்ராம், வினேகா, விஸ்மிகா (பிரான்ஸ்), ஐஷானி, ஜணிஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கைதடி கிழக்கிலுள்ள மகனின் இல்லத்தில் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை தற்போதைய சுகாதார விதிமுறைகளை அனுசரித்து நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 01 மணியளவில் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தோற்றம் 16.06.1924** **மறைவு 22.08.2021**

கைதடி கிழக்கு, கைதடி.

**தகவல்:**
**மகன்-பொ.அருணாசலம்**
**உரிமையாளர்-நியூ கணேசன் ஸ்ரோர்ஸ்,**
**கைதடி சந்தி, கைதடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணத்தில்...
அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ். மாவட்டத்தில் கொரோனா அபாயம் மிகத் தீவிரமடைந்துள்ள நிலையில் பொதுமக்கள் தம் வீடுகளில் பாதுகாப்பாக இருப்பது சிறந்தது. நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை 148 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் மாவட்டத்தில் தொற்றாளர்கள் எண்ணிக்கை 10 ஆயிரத்து 166 ஆக உயர்ந்துள்ளதுடன், கொரோனா மரணங்கள் 200ஆக உயர்ந்திருக்கின்றன.

இந்த அதிகரிப்பின் பெரும் பகுதி மே மாதத்தின் பிற்பகுதியில் நடந்ததாகும். தற்போது தினசரி தொற்றாளர்கள் எண்ணிக்கை சராசரியாக 130வரை இனங்காணப்படுகின்றது. இது மோசமான அதிகரிப்பாகும் - என்றார். (ம-20)

### நேற்று மட்டும்...
நாடு தழுவிய ஊரடங்கு வேளையிலும் கொரோனாத் தொற்று உறுதியான 4 ஆயிரத்து 282 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 90ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 18 ஆயிரத்து 769 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 42 ஆயிரத்து 159ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-22)

### மேலும்...
தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தச் சாவுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 366ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 183 பேரில் 107 ஆண்களும், 76 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் இரண்டு பெண்கள் 30 வயதுக்குட்பட்டவர்கள். 27 ஆண்கள், 18 பெண்கள் என 45 பேர் 30 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 136 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். (ம-22)

### ஊரடங்கிலும்...
டார் சைக்கிளில் துரத்தித்துரத்தி மூவர் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியில் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக நேற்று மாலை 4 மணியளவில் இந்தப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளானவர்களையும் தாக்குதல் நடத்தியவர்களையும் தமக்கு தெரியாது என்றும் அவர்கள் வேறுபகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்த நிலையில் அவர்களை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் துரத்திவந்த நால்வர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மூவரில் ஒருவரின் கால்கள் இரண்டும் கடுமையாக வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-20,26)

### கொரோனாவால்...
ழந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். (ம-26)

### கொரோனாப் பேரலை...
கப்பட்டிருந்த சிப்பிகுளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர், நேற்றுமுன்தினம் திடீர் சுகவீனமுற்ற நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இதேவேளை வவுனியா தோணிக்கல் பகுதியை சேர்ந்த நபரொருவரும் கொவிட் காரணமாக உயிரிழந்தார். அவர் மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். (ம-110)

### தமிழ்த்....
நடைமுறைப்படுத்த அரசையும் இந்தியாவையும் கோருதல் உள்ளிட்ட விடயங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து மெய்நிகர் இணைய வழியின் ஊடாக நேற்று தமக்குள் பேச்சு நடத்தியுள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படும் நோக்கிலே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேற்படி நான்கு விடயங்களில் ஒருமித்துச் செயலாற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், ரெலொவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், அந்தக் கட்சியின் உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், குருசுவாமி சுரேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புளொட் தலைவர் சித்தார்த்தன் இதில் கலந்துகொள்வார் எனக் கூறப்பட்டது. எனினும், மெய்நிகர் உரையாடல் இணைப்பு ஏற்பாடு சீரமைக்கப்படுவதில் சிக்கல் நேர்ந்தமையால் அவர் பங்கு பற்ற முடியாமல்போனது.

ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்கள், எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் மற்றும் தமிழ்த் தரப்பினரோடு அரசு முயற்சிக்கும் பேச்சு ஆகியவையும் முக்கிய விடயங்களாக இதன்போது பேசப்பட்டன.

வரவிருக்கும் ஐ.நா. கூட்டத் தொடரில் 46/1 தீர்மானம் சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. அதன் பொருட்டு தமிழ்த் தரப்பினால் ஒருமித்து அறிக்கை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பது என்றும், தீர்மானத்தில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமலும் அதேவேளை அதற்கு எதிராகச் செயற்படுவதைச் சுட்டிக்காட்டியும் குறிப்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக் கப்படும் நடவடிக்கைகளின் விவரங்களையும் அந்த அறிக்கையில் உள்ளடக்குவது என்றும் இணக்கம் காணப்பட்டது. (ம-22)

### கிளிநொச்சியில்...
திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவந்தபோது, கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

ஹைஏஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன மோதியதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. ஒருவர் உயிரிழந்ததுடன் இன்னொருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-113)

### பதில் பணிப்பாளரை...
யில் மிரட்டிய நபர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதி செயலக அதிகாரி என தன்னை அறிமுகப்படுத்திய அந்த நபர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்கான ஒப்பந்தத்தை தாம் முன்மொழிபவருக்கே வழங்கவேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

இந்தத் தொலைபேசி அழைப்பு கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மருத்துவமனை பதில் பணிப்பாளருக்கு வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கினார். அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மைப் பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, தொலைபேசி அழைப்பு எடுத்தவர் நீர்கொழும்பில் வசிப்பவர் எனக் கண்டறிந்தார். அவரைக் கைது செய்வதற்கான விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த யாழ்ப்பாணம் பொலிஸார், பிடியாணை உத்தரவு ஒன்றையும் பெற்றனர்.

சந்தேக நபரின் இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபரைக் கைது செய்து யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர். (ம-20,26)

### யாழில்...
பாணத்தில் பாணின் விலை இன்னும் அதிகரிக்கப்படாத நிலையில், வீடுவீடாகச் சென்று வாகனங்களில் பாண் விநியோகம் செய்பவர்கள் 70 ரூபாவுக்கு ஒரு இறாத்தல் பாணை விற்பனை செய்துள்ளனர். எனவே இவ்வாறான மோசடிகளுக்கு எடுபடாமல் அவதானமாக இருக்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (ம)

### பல்கலை...
வார காலமாக நிறுத்தப்பட்டுள்ளன. மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள் (எம்.எல்.ரி) இல்லாமையாலேயே பரிசோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள சூழலில் தினமும் அதிகளவான பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நேரத்தில், மருத்துவபீட சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரமே தற்போது சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வடக்கில், பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு அதன் முடிவுகள் கிடைக்கப்பெறுவதற்கு 6 நாள்கள் வரையும் செல்கின்றன. இதனால் தனிமைப்படுத்தப்படுலில் இருப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள் கற்கைநெறியை முடித்த, ஆராய்ச்சி உதவியாளர்கள் 4 பேர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இதுவரை பணியாற்றி வந்தனர். அவர்கள் மருத்துவ ஆய்வுகூட உதவியாளர் உள்ளகப் பயிற்சிக்காக மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் தமது தற்காலிக, ஆராய்ச்சி உதவியாளர் பதவியைத் துறந்துள்ளனர். இதனாலேயே மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். சோதனைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை முழு அளவில் மேற்கொள்வதற்கு ஆகக் குறைந்தது 5 மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள் தேவை என்று கூறப்படுகின்றது. (ஒ.5)

### இரண்டாயிரம்...
கொடுப்பனவைப் பெறுவதற்கு யார் தகுதியானவர்கள் என்பது தொடர்பான விவரம் வெளியாகியுள்ளது.

இதன்படி, அரச ஊழியர்கள், ஓய்வூதியர், சமுர்த்தி பயனாளிகள், மூத்த பிரஜைகள், அங்கவீனமுற்றோர் உள்ளிட்ட எந்தவொரு நிவாரணக் கொடுப்பனவையும் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளாத, குறைந்த வருமானம் கொண்ட, வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு மாத்திரமே மேற்படி தொகை வழங்கப்படவுள்ளது.

பிரதம அமைச்சரின் மேலதிக செயலரும், பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் இணைச்செயலாளருமான அன்ரன் பெரேரா இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். (ம)


### யாழ்.நகரில்...
ரால் நேற்று அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 7 பேருக்கு கொவிட் உறுதிப்படுத்தப்பட்டது.

தேவையற்று நடமாடிய 76 பேர் நேற்று அன்டிஜென் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதிலேயே 7 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் படைகள் நுழைந்ததும் பின்லேடனின் முகம் கலவரமானது!

## நான்காவது மனைவி பேட்டி



**வொஷிங்டன், ஓக. 23**

**அமெரிக்கப் படைகள் நுழைந்ததும் பின்லேடன் திடுக்கிட்டு எழுந்தார். அவரின் முகம் கலவரமானது. அனைவரும் பதற்றத்துக்கு ஆட்பட்டோம். அப்போது பின்லேடன், 'என்னைக் கொல்வதுதான் அவர்களின் நோக்கம். உங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள்' என்று எங்களிடம் தெரிவித்தார் என பின்லேடனின் நான்காவது மனைவி பேட்டி வழங்கியுள்ளார்.**

எழுத்தாளர்கள் ஸ்காட் கிளார்க், அட்ரீயன் லெவி ஆகியோர் இணைந்து பின்லேடனின் மரணம் தொடர்பாக புத்தகம் ஒன்று எழுதியுள்ளனர். அதில் பின்லேடனின் மனைவி அமாலின் விரிவான பேட்டிகளும் இடம்பெற்றுள்ளன. அமால் அதில் கூறியிருப்பதாவது:

மே முதலாம் திகதி இரவு உணவு முடிந்ததும், பாத்திரங்கள் சுத்தம் செய்யப்பட்டன. வழக்கமான இரவுத் தொழுகைக்கு பிறகு நானும், பின்லேடனும் மாடியில் இருந்த படுக்கை அறைக்கு சென்றோம்.

இரவு 11 மணி அளவில் பின்லேடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அந்த நேரத்தில் திடீரென மின்சாரம் தடைப்பட்டது. பாகிஸ்தானில் அடிக்கடி மின்சாரம் தடைப்படும். எனவே நாங்கள் இதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

சற்று நேரத்தில் எனது மனதில் ஏதோ ஒரு கலக்கம் ஏற்பட்டது. எனது தூக்கம் முற்றிலும் கலைந்துவிட்டது. அந்த நேரத்தில் வீட்டின் அருகே சத்தம் கேட்டது.

அது பிரமையாக இருக்கும் என்று கருதினேன். சிறிது நேரத்தில் மாடியில் யாரோ ஏறுவதுபோல தோன்றியது. எனவே எனக்கு பயம் ஏற்பட்டது. அதை உன்னிப்பாக கவனித்தேன்.

மின்சாரம் இல்லாமல் இருந்தாலும் யாரோ கடந்து போன நிழல் தெரிந்தது. இந்த நேரத்தில் சத்தங்கள் அதிகமாகின.

அந்நியர்கள் யாரோ உள்ளே வந்துவிட்டார்கள் என்று கருதினேன். இந்த நேரத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த பின்லேடனும் திடுக்கிட்டு எழுந்தார். அவர் முகத்தில் கலவரம் தெரிந்தது. அந்த நேரத்தில் எங்களை யாரோ உற்று பார்ப்பதையும், மேலே ஆட்கள் ஓடுவதையும் உணர்ந்தேன். சட்டென்று நாங்கள் இருவரும் அங்கிருந்து எகிறிக் குதித்து ஓடினோம். கதவின் வழியாகப் பார்த்தோம். அப்போது அமெரிக்காவின் ஹெலிகொப்டர் வீட்டின் அருகே நின்றது.

சிறிது நேரத்தில் மற்றொரு ஹெலிகொப்டரும் அங்கு வந்தது. பின்லேடனின் மற்ற மனைவிகளும், குழந்தைகளும் 2ஆவது மாடியில் இருந்தனர். அவர்களும் கீழே வந்தார்கள். யாருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை.

நாங்கள் பயப்பட்டோம். அப்போது பின்லேடன் 'அவர்கள் என்னைத்தான் கொல்ல விரும்புகிறார்கள். உங்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள்' என்று கூறினார். மனைவிகளையும், குழந்தைகளையும் வீட்டின் கீழ்த் தளத்துக்கு செல்லும்படி கூறினார். நான் அருகிலேயே அமர்ந்திருந்தேன்.

சிறிது நேரத்தில் அமெரிக்க வீரர்கள் மேல்தளத்துக்கு வந்து விட்டனர். குழந்தைகள் அழுதனர். நான் அவர்களை சமாதானப்படுத்தினேன். அடுத்த சில நிமிடங்களில் எல்லாம் முடிந்து விட்டது - என்றார். (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானசிங்கம் இராஜேஸ்வரி



பிறப்பு 15.12.1942 இறப்பு 22.08.2021

திருமதி ஞானசிங்கம் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் திரு. ஞானமுத்து ஞானசிங்கம் (மேற்பார்வையாளர்-சீநோர்) அவர்களின் அன்பு மனைவியும், அந்தோனிப்பிள்ளை பொன்னம்மா ஆகியோரின் அருமை மகளும், திரு. அன்ரன் ராஜசேகரன் (உரிமையாளர், Mary Construction) அமரர் அன்ரன் குணசேகரன், திருமதி லூர்து ஞானமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி மாலினி, அமரர் மரியாம்பிள்ளை நிக்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மெல்சியா (லண்டன்), கிறிஸ்ரீனா, துஷிந்தா, ஆன் கொலன்சியா, துஷாரா, கெவின்ராஜ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், எல்றோயின், எமிலி, எலனா ஆகியோரின் பாசமிகு பூட்டியாரும், அந்தோனிப்பிள்ளை திரவியம், மரியாம்பிள்ளை அகத்தம்மா, அமரர் யோண் மேரி றோஸ், அந்தோனிப்பிள்ளை சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரவியம் பாக்கியம், க.ப. மரியாம்பிள்ளை (அமரர்), மடுத்தீன் யோண் (அமரர்), சந்திரன் அன்ன பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.08.2021) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 (மூன்று மணிக்கு) கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.